Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12


கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11750)

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 சித்திரை-29 12-05-2005 வியாழக்கிழமை ஓசை 83

## நவம் அறிவுக்கூட புதிய கட்டடத் தொகுதி தேசியத்தலைவரால் திறந்துவைப்பு

லெப். கேணல் நவம் அறிவுக்கூடத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தொகுதியை தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் விழாவின் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை ஏற்றி வைத்தார். லெப். கேணல் நவத்தின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றி வைத்தார். திருவுருவப்படத்திற்கான மலர்மாலையை லெப். கேணல் நவத்தின் தந்தையார் அணிவித்தார். தொடர்ந்து தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் லெப்.கேணல் நவத்தின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி அகவணக்கம் செலுத்தினார்.

நவம் அறிவுக்கூட பெயர்ப்பலகையை தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் திரைநீக்கம் செய்து வைத்து மண்டபத்தையும் திறந்து வைத்தார்.அதனைத் தொடர்ந்து அங்கு நினைவு மரத்தையும் அவர் நடுகை செய்தார்.

தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் தமிழீழ தேசியத்தலைவர் அவர்கள் புதிய கட்டட கட்டுமானப் போராளிகளுக்கு பரிசில்களைவழங்கிக் கௌரவித்தார். போராளி ஓவிய ஆசிரியர் நீதன் உருவாக்கிய மரச்செதுக்குச் சிற்பத்தை நவம் அறிவுக்கூடப்

(12ஆம் பக்கம் பார்க்க)






# தமிழர் தாயகத்தில் இரண்டாவது நாளாக

# அரசிற்கெதிரான வெகுசனப் போராட்டங்கள்!

## மன்னாரில் படையினர் வன்முறை

(நமது செய்தியாளர்)

**மட்டக்களப்பு சந்திவெளிப்பகுதியில் கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்திய பொதுமக்கள் மீது சிறிலங்காப் படையினர் நடத்திய வெறித்தனமான தாக்குதலைக் கண்டித்து தாயகப்பகுதியில் நேற்றும் வெகுசனப் போராட்டங்கள் நடைபெற்றன. கிளிநொச்சி, மன்னார், ஒட்டுசுட்டான், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் இந்தப் போராட்டங்கள் இடம்பெற்றன.**

மன்னாரில் படையினர் வன்முறைகளில் ஈடுபட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கிளிநொச்சியில் நேற்று வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு மாபெரும் கண்டனப் பேரணியும், மகஜர்கையளிப்பும் நடைபெற்றன.

இப்பேரணி கிளி/மத்திய கல்லூரியில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை போர் நிறுத்தக்கண்காணிப்புக்குழு செயலகத்தில் மகஜர் கையளித்த பின் கிளி/அரச அதிபர் செயலகத்திற்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவைக் கூட்டங்களை புறக்கணிக்க ஜே.வி.பி முடிவு

(கொழும்பு)

நேற்றையதின்ம் நடைபெற்ற சிறிலங்கா அமைச்சரவைக் கூட்டத்தை ஜே.வி.பி அமைச்சர்கள் புறக்கணித்துள்ளனர்.

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்புத் தொடர்பாக அரசுக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்து கடந்தவாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலிருந்து ஜே.வி.பி யினர் வெளியேறியிருந்தனர்.

எனினும், அன்றையதினம் முன்வைக்கப்பட்டிருந்த மின்சாரசபை தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இவ்வாறு நிறைவேற்றப்பட்ட அமைச்சரவைப்பத்திரம் அரசாங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவிற்கு உதவும் நாடுகளின் மாநாட்டிற்கு முன் வெளிநாட்டுத் தூதுவர்களை த.தே கூட்டமைப்பு சந்திக்கும்

### பொதுக்கட்டமைப்பின் தேவை குறித்து வலியுறுத்த முடிவு

(கொழும்பு)

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெறுவதற்கு முன்னர் குறிப்பிட்ட நாடுகளின் தூதுவர்களை தமிழ்த் தேசியக கூட்டமைப்பினர் சந்திக்கவுள்ளனர் இந்தத் தகவலை கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படாத நிலையில் சுனாமியின் பின் வடக்குக் கிழக்கில் மக்கள் பாரிய சிரமங்களுக்கு உட்பட்டுள்ளனர். எனவே உடனடியாக தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையிலானபொதுக்கட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## -அத்தியாவசியப்பொருட்கள் மீதான- இராணுவத் தடைகளைக் கண்டித்து மூதூரில் மக்கள் ஆர்ப்பாட்டம்!

(திருமலை)

மூதூர்ப் பகுதிக்கு சிறிலங்கா இராணுவத்தினர் அத்தியாவசியப் பொருட்கள் கொண்டு செல்வதற்கு தடை விதித்தமையைக் கண்டித்து மூதூரில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது.

பொருளாதாரத்தடையை முழுமையாக நீக்குமாறுகோரி நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணி மூதூர் பூநகரில் இருந்து ஆரம்பமாகி மகிந்தபுரம் இராணுவக் காவலரண் வரை சென்றடைந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அகாஸி கொழும்பு வருகை

ஜப்பானின் இலங்கைக்கான விசேடதூதர் யசூசி அகாஸி நேற்று இரவு 8.45 அளவில் கத்தே பசுபிக் 735 என்ற வானூர்தியில் கொங்ஹொங்கில் இருந்து கொழும்பை வந்தடைந்துள்ளார் அவரை ஜப்பானிய தூதரக. அதிகாரிகளும்,சிறிலங்காவின் வெளியுறவு அதிகாரிகளும் வரவேற்றனர்.(32)

## கொள்கைத்திட்ட அறிக்கை வெளியிடாமை குறித்து அரசாங்கத்தின் மீது அதிருப்தி!

சிறிலங்கா அரசாங்கம் தனது கொள்கைத் திட்ட அறிக்கையை இன்னமும் வெளியிடாமை குறித்து இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கவலை வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் 16ஆம் திகதி கண்டியில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டிற்கு இரண்டுவாரத்திற்கு முன்னர் சிறிலங்கா அரசாங்கம் தனது கொள்கைத்திட்ட அறிக்கையை வெளியிட வேண்டுமென இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் வலியுறுத்தியிருந்தன. எனினும், சிறிலங்கா அரசாங்கம் இதுவரை கொள்கைத்திட்ட அறிக்கையை வெளியிடவில்லையென

(12ஆம் பக்கம் பார்க்க)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
கலாநிதி செல்லையா சிவசாமி J.P
(சிவசாமி அன்கொம்பனி)

கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக அன்புக் கரம் நீட்டி ஆதரவளித்த செம்மலுக்கு எமது இதய அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன். அன்னாரது ஆத்மா சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய கல்விச் சமூகத்தினர்.

(சி.11957)

# துயர் பகிர்கின்றோம்



**ஆறுமுகம் கதிரவேலு**

கரைச்சிகிழக்கு ப.நோ.கூசங்கத்தில் செயலாளராக கடமையாற்றும் திரு.க.கங்காதரன் அவர்களின் அன்புத் தந்தையாகிய ஆறுமுகம் கதிரவேலு அவர்களின் திடீர் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம்சாந்தி ஓம்சாந்தி ஓம்சாந்தி

தகவல்
பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்,
கரைச்சி பநோ.கூ.சங்கம்
வட்டக்கச்சி.

(6121)

## அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

(நமது நிருபர்)

உருத்திரபுரம் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் நாளை மறுதினம் வைத்தியசாலையில் நடைபெறுமென சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

அன்று மாலை நான்கு மணிக்கு நடைபெறும் மேற்படி கூட்டத்தில் அப்பகுதி கிராம வாழ் மக்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

கிளிநொச்சி இரத்தினபுரத்தில்-கிளிநொச்சி நகரக்குளம் (5அடிவான்) புதுப்பாலம் சந்திக்கும்,இரத்தினபுரம் மாதாகோவிலுக்கும்இடையில் உள்ள 1/2 ஏக்கர் காணி விற்பனைக் குண்டு.தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசிஇல.024-2224247, 0776-059672. (சி.11903)

### விற்பனைக்குண்டு

கனகபுரம் 7ஆம் பண்ணையில் $2^1/_2$ ஏக்கர் உறுதிக்காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு முத்தம்பன் பல்பொருள் வாணிபம் கனகபுரம் றோட், கிளிநொச்சி.

(6117)

### தவறிவிட்டது

முரசுமோட்டையைச் சேர்ந்த சிறி.சுரேந்திரா ஜெயரூபனது அடையாள அட்டை,பயணஅனுமதி அட்டை,வாகன அனுமதிஅட்டை, வயறிங் அடையாள அட்டை என்பன முள்ளியவளைக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர் இயற்கை விற்பனை நிலையம் அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். சன்மானம் வழங்கப்படும். (6118)

## கிளிநொச்சி நகரில்!!
## புகைப்படத்துறையில் புதிய அத்தியாயம்!!!
## DIGITAL Studio அறிமுகம்

பாஸ் மற்றும் சகல அடையாள அட்டைப் படங்களையும்10 நிமிடத்தில் வழங்குகின்றோம்.
டிஜிற்றல் அல்பம் தயாரிப்பவர்கள்.
கே.எஸ்.ஆர் (K.S.R. PHOTOS)
வீடியோ புகைப்படச்சேவை
இல.05,கனகபுரம் வீதி, சந்தைக்கு அருகாமை, கிளிநொச்சி. (6120)

# காணி வீடு விற்பனைக்கு
## பத்தமேனி அச்சுவேலி

1 1/2 பரப்புக் காணியில் குசினி உட்பட 6 அறை, கோல், கிணறு, மலசலகூடம் உட்பட விற்பனைக்குண்டு. அச்சுவேலி பேருந்து நிலையத்திலிருந்து 100மீற்றர் தூரம். (தேவி மில்லுக்கு அருகாமையில்) தொடர்பு கொள்ள வேண்டியது.

செ. டானியல்
ஆசிரியர்

இல. 6,குட்செட் வீதி,
வவுனியா.
T.P. 024-2220466

(11877)

# மே 7 முதல்

பாடநூல் வெளியீட்டிலும், நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும்
கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை
அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

## மாபெரும் புத்தகக் கண்காட்சியும்
## மலிவு விற்பனையும்

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு வெளிநாட்டு [ஆங்கில,தமிழ்] பாடநூல்களும், அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல

**இடம்:-** யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்
**காலம்:-** 2005மே மாதம் 07ஆம் திகதி முதல் 15 ஆம்திகதிவரை
**நேரம்:-** காலை 9.00 மணிமுதல் மாலை 6.00மணிவரை (புதியநேரம்)(வாரஇறுதி நாட்களும் விடுமுறை நாட்களும் உட்பட)

சிறப்பு விலைக்கழிவு

தொடர்புகளுக்கு,
தலைவர்,வணிக மாணவர் மன்றம்,
யாழ்-பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம்.

(சி.11864)

# வடகிழக்கு இளையோர் செயற்பாட்டு நிறுவனம்

பின்வரும் பதவிக்கான விண்ணப்பங்கள் தகைமையுடையவர்கள் ஆண்,பெண் இருபாலாரிடமிருந்தும் கோரப்படுகின்றது.

**பதவி நிலை:- செயற்திட்ட உதவியாளர்.**

**தகைமை:-** ஆங்கில மொழியில் தேர்ச்சியுடையவராகவும், கணினி அறிவுடையவராகவும் இருத்தல் அவசியமாகும். (க.பொ.த.சாதாரணம் ஆங்கிலம் 'C' தரத்துக்கு குறையாது இருத்தல்வேண்டும்.)

**சம்பளம்:-** நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 20.05.2005 ஆம் திகதிக்கு முன்பாக செயலாளர், இளையோர் செயற்பாட்டு நிறுவனம், யாழ்.வீதி, கிளிநொச்சி. எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(சி.11955)

# புகையிரத வீதியில் கடை நிலம் வழங்கல்

*கிளிநொச்சிச் சந்தைக்கு அண்மையில் உள்ள புகையிர பாதை ஓரம் கடை நிலம் வழங்கல் தொடர்பான கலந்துரையாடல் 13.05.2005 ஆம்திகதி நாளைகாலை 10.00 மணிக்கு கரைச்சிப் பிரதேசசபையில் நடைபெறவுள்ளது. இதற்கு விண்ணப்பித்தவர்கள் மட்டும் உரிய திகதியில் கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.*

01.குடும்ப அட்டை
02.அடையாள அட்டை
03.தாங்கள் கடைகோருவதற்கான விசேடகாரணங்களிருப்பின் அதற்கான ஆவணங்கள்.

(பொன்.நித்தியானந்தம்)
விசேடஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.

(சி.11956)

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
26 - 06 - 1953



வீரச்சாவு
12 - 05 - 1985

### லெப். இளங்கோ

*தீத்துஸ்பிள்ளை மேரிதாசன்*
லிங்கநகர், திருகோணமலை.

ஆண்டிருபது கடந்தபோது
அழியாத நினைவுகளாய் - எம்மை
ஆறாத துயரில் ஆழ்த்திச் சென்றீர்கள்.
ஆற்றல் மிகு தலைவனின் அன்புக்குரியவனாய்
ஆரம்பப் புலிப்படையின் துணிவுமிக்க வீரனாய்
பேரினவாதிகளுடன் போரிட்டு நீ காவியமாகி ஐ நான்கு வருடங்களாகியும்
எம் ஆழ்மனதை ஆழ்கின்றது - உங்கள்
அழியாத நினைவுகள்.


பிள்ளைகள்,
அறிவழகன், அறிவழகி,
தேன்மொழி


தகவல்:
பி. அறிவழகி,
கணக்காய்வுப் பகுதி,
நிதிப்பிரிவு, அரசியல்துறை.

(6116)

# பாக்தாத், திக்றிட்டில் குண்டு வெடிப்புக்கள்

## 90 பேர் பலி; நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம்






ஈராக்கில் கார்க்குண்டுத் தாக்குதலில் சேதத்திற்கு உள்ளான கார் ஒன்றினையும், தீ அணைப்பு பணியில் ஈடுபட்டுள்ள தீ அணைப்புப் படையினரையும் படத்தில் காணலாம்

(பாக்தாத்)

**ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் பல பகுதிகளிலும் நேற்று அதிகாலை இடம் பெற்ற மூன்று தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களிலும், ஏனைய குண்டு வெடிப்புக்களிலுமாக 90இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன். நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.**

திக்றிட்டில் ஷியா முஸ்லிம் தொழிலாளர்கள் கூட்டத்தின் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 50இற்கும் மேற்பட்டோர் பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், 60 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனா். அத்துடன் எண்ணெய் வளம் மிக்க திக்றிட் நகரிற்கு தென்மேற்கேயுள்ள கபிஜா எனுமிடத்தில் தற்கொலைக் குண்டுதாரியொருவர் இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்க்கும் நிலையத்தின் மீது நடத்திய தாக்குதலில் 19 பேர் பலியானதுடன் 25 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இதேவேளை பாக்தாத்தின் தென்பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு வெளியே மோட்டார் வாகனத்தில் வைக்கப் பட்டிருந்த குண்டொன்று வெடித்ததில் நான்கு பேர் பலியானதுடன், பத்து இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.



அமெரிக்கப்படையினரின் தாக்குதலில் தனது கணவரின் கார் தாக்கப்பட்டதை அடுத்துத் தேம்பியழும் ஈராக்கியப் பெண்மணி ஒருவர்.

## ஈரான் சனாதிபதித் தேர்தலில் தொழிற்சாலைக் காவலாளி போட்டி

(தெஹ்ரான்)

ஈரான் சனாதிபதித் தேர்தலில் போட்டியிட தொழிற்சாலைக் காவலாளி ஒருவர் தன் பெயரைப் பதிவு செய்துள்ளார்.

ஈரான் சனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் 17ஆம் திகதி நடக்கின்றது.

அபுல்காசம் காக்கி என்ற அவர் தன் பெயரைப் பதிவு செய்வதற்காக மேபோட் நகரில் இருந்து தெஹ்ரான் நகருக்கு வந்தார்.

போட்டியிடப் பெயரைப் பதிவு செய்தாலும், பழமைவாதிகளைக் கொண்ட காப்பாளர் குழு இவரது மனுவைத்தள்ளுபடி செய்துவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2001ஆம் ஆண்டுத் தேர்தலில் 814 பேர் போட்டியிட்டதில் பத்துப் பேரை மட்டுமே இந்தக் குழு போட்டியிட அனுமதித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய காலணி கண்டுபிடிப்பு

(லண்டன்)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய உலோக காலத்தைச் சேர்ந்த பழமையான காலணி ஒன்று கண்டு எடுக்கப்பட்டுள்ளது.

30 செ.மீ நீளமுள்ள தோலினாலான இந்தக் காலணி தெற்கு இங்கிலாந்தில் ஒரு மரப் பொந்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் இலாகா அதிகாரி ரிச்சர்டு வுட் கேட், "இதுதான் பழமையானது நன்கு பராமரிக்கப்பட்டுள்ளது கயிறு போட்டு கட்டுவதற்காக துளைகள் உள்ளன என்று கூறினார்.

இந்தக் காலணி எக்ஸ்டெர் நகரிலுள்ள ஆல்பர்ட் நினைவு அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு இருக்கும்"என்றும் தெரிவித்தார். இந்த காலணி இருந்த மரம் கி.மு.1460 முதல் 1290 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகும்.



காத்மண்டுவில் நேபாள தேசிய சுதந்திர மாணவர் அமைப்பின் அலுவலகத்தை பறிமுதல் செய்த நேபாள அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவன் ஒருவரை நேபாளப் பொலிசார் கைது செய்கின்றனர்.

## இராணுவம், தீவிரவாதிகள் மோதல் நேபாளத்தில் 36 பேர் உயிரிழப்பு

(காத்மண்டு)

நேபாளத்தில் இராணுவ முகாம் ஒன்றின் மீது மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கடந்த திங்களன்று கொரில்லாத் தாக்குதல் நடத்தினர். அப்போது இராணுவத்திற்கும், தீவிரவாதிகளுக்குமிடையே நடந்த கடும் சண்டையில் 32 தீவிரவாதிகள், மூன்று பொலிசார், ஒரு இராணுவ வீரர் என 36 பேர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேபாளத்தில் 1996 முதல் இன்று வரை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இராணுவத்திற்கும், மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த சண்டையில் இதுவரை 11 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த பெப்ரவரியில் நேபாள மன்னர் ஞானேந்திரா அவசர நிலையை பிரகடனம் செய்தார். இதன் பின்னர். மாவோயிஸ்ட்டுக்களின் தாக்குதல் அதிகரித்துள்ளது.

## ஆப்கான் முன்னாள் பிரதமருக்கு பொது மன்னிப்பு அந்நாட்டு அரசு அறிவிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் முன்னாள் பிரதமர் ஹெக்மதியார் தலிபான் தலைவர் முல்லா முகமது ஓமர் ஆகியோருக்கு பொதுமன்னிப்பு வழங்குவதில் எவ்விதத் தயக்கமும் இல்லை என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

## கஞ்சா கடத்தியதாக வழக்கு 38 வயது தமிழருக்கு தூக்குத் தண்டனை

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரைச்சேர்ந்த 38 வயதுத் தமிழருக்கு கஞ்சா கடத்தல் வழக்கில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதை எதிர்த்து அவர் தாக்கல் செய்த அப்பீல் மனு தள்ளுபடி செய்யப்பட்டதால் அவர் நாளை தூக்கிலிடப்படுகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூரைச் சேர்ந்த சண்முகம் முருகேசு, (வயது-38) 2003ஆம் ஆண்டு மலேசிய எல்லையில் ஒருகிலோ போதைப் பொருளைக் கடத்தியதாக கைது செய்யப்பட்டார். பின்னர் நீதிமன்றில் இவர் மீது வழக்குத்தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்று இவருக்கு தூக்குத்தண்டனை விதித்தது.

இரட்டையாகப் பிறந்த 14 வயது மகன்கள், அப்பாவைத் தூக்கில் போட்டால் நாங்கள் அனாதைகளாகிவிடுவோம் என்று கூறி தூக்குத்தண்டனைக்கு எதிராக பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

சனாதிபதி எஸ்.ஆர்.நாதனுக்கும் மன்னிப்பு அளிக்கக்கோரி அப்பீல் மனு அனுப்பப்பட்டது. மன்னிப்பு அளிக்கத் தகுதி இல்லை என்று சனாதிபதி கூறிவிட்டார்.

இந்த நிலையில் முருகேசுவின் குடும்பத்துக்கு வந்த அறிக்கையில் மே 13ஆம் திகதி முருகேசு தூக்கிலிடப்படுவார் என்று கூறப்பட்டுள்ளது.

கஞ்சா கடத்தலுக்கு உலகிலேயே கடுமையான சட்டத்தை சிங்கப்பூர் அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. 500 கிராமுக்கு அதிகமாக கஞ்சா கடத்தும் எந்த ஒருவருக்கும் மரணதண்டனை விதிக்கப்படும் என்பது அந்த நாட்டின் சட்டமாகும்.

சிங்கப்பூரில் 1991ஆம் ஆண்டு முதல் 400 பேர் தூக்கிலிடப்பட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் கஞ்சா கடத்தலில் சம்பந்தப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.



இரண்டாம் உலகப் போரில் நாஜிப்படைகளை வெற்றி கொண்ட நாள்மொஸ்கோவில் கொண்டாடப்படுகிறது. ஸ்பாஸ்கயா கோபுரத்தின் பின்னணியில் 'வர்ண ஜாலம்' காட்டிய வாண வேடிக்கை.

## மாணவர்களுடன் தகாத உறவு அமெரிக்க ஆசிரியர் ஒருவர் கைது

(பாங்ஹொக்)

தாய்லாந்தில் ஆசிரியராக பணியாற்றி வந்த அமெரிக்கர் சிறுவர்களிடம் தகாத உறவு வைத்திருந்ததற்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த 56 வயதான ஸ்டீவன் எரிக்ப்ராலர் தாய்லாந்து தலைநகர் பாங்ஹொக்கில் அரச பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக பணியாற்றி வந்த இவர், தன்னிடம் படித்த மாணவர்களைத் தகாத உறவுக்கு பயன்படுத்தி வந்துள்ளார். ஸ்டீவன் எரிக் தங்களை பாலியல் ரீதியாக தொல்லை கொடுப்பது குறித்து மாணவர்கள் அளித்த முறைப்பாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 500இற்கும் அதிகமான மாணவர்களின் நிர்வாணப்படங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் 10 ஆண்டுக்கும் அதிகமான சிறைத்தண்டனை கிடைக்கும் எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.



வேரவிலில் கௌசல்யன் நடமாடும் சிறப்பு மருத்துவ சேவையினர்.

(படங்கள் : குகன்)

# கௌசல்யன் நடமாடும் சிறப்பு மருத்துவ சேவை

## முதல் கட்டம் வேரவில்ல் நேற்று முன்தினம் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

**தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவினரால் லெப்.கேணல் கௌசல்யன் நடமாடும் சிறப்பு மருத்துவ சேவை தமிழீழமெங்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

இதன் முதல் கட்டமாக வேரவில் பிரதேசத்தில் மருத்துவசேவை நேற்று முன்தினமும் நேற்றும் இடம்பெற்றது நவீன இலத்திரனியல் மருத்துவ ஆய்வுகூட வசதியுடன் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நேற்று முன்தினம் இதன் ஆரம்ப நாள் நிகழ்வு காலை 8.15 மணியளவில் வேரவில் வைத்திய சாலை முன்றலில் கிளி நொச்சி மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் தலைமையில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் ரேகா ஏற்றிவைத்தார். தொடர்ந்து தேசியக் கொடியினை வைத்திய கலாநிதி ஓவியன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து லெப்.கேணல் கௌசல்யனின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரை வைத்தியகலாநிதி எழுமதி கரிகாலன் மற்றும் தேவா ஆகியோர் ஏற்றினார்கள். லெப்கேணல் கௌசல்யன் படத்திற்கான மலர் மாலையை தமிழீழ சுகாதாரசேவைப் பணிப்பாளர் விக்கினேஸ்வரன், தமிழீழ மகளிர் மருத்துவப் பொறுப்பாளர் அருந்தா, களமருத்துவப் பொறுப்பாளர் மனோச் ஆகியோர் அணிவித்தனர்.

தொடர்ந்து தலைமையுரையை கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் நிகழ்த்தினார். சிறப்புரையை வைத்திய கலாநிதி ஓவியன் நிகழ்த்தினார்.

இம் மருத்துவ சேவையானது தேசியத்தலைவரின் பணிப்புரைக்கமைவாக தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவினர் தமிழர் தாயகத்தில் பின்தங்கிய பிரதேசவாழ் மக்களின் நலன்கருதி அவர்களது சுகாதார வைத்திய மேம்பாட்டை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக வேரவில் பிரதேசத்தில் வேரவில், வலைப்பாடு, பொன்னாவெளி, பாலாவி, கீரிக்குடா, கிராஞ்சி, பிருந்தாவனம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் சுகாதார நலவாழ்வை மேம்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது மாதாந்தம் ஒவ்வொரு பிரதேசத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் இப்பணியில் நூற்றுக்கணக்கான மருத்துவ போராளிகளும், அனுபவம் வாய்ந்த விடுதலைப்புலிகளின் மருத்துவர்களும் ஈடுபட்டுள்ளனர். இவர்களது சிகிச்சைகளாக குழந்தை மருத்துவம், கண்,காது, பல் வைத்தியம், சத்திர சிகிச்சை, பொதுவைத்தியம் போன்ற மருத்துவ சேவைகள் பல நவீன இலத்திரனியல் கருவி களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது பொது மக்கள் யாவரும் ஆவலுடனும், மகிழ்வுடனும் இங்கே பயன்பெற்று வருகிறனர். (கு)

## தாயகம் திரும்பிய அகதிகள் கடற்புலிகளின் உதவியுடன் சொந்த இடத்திற்கு அனுப்பிவைப்பு

(மன்னார்)

இந்தியாவிலிருந்து இலங்கைத்தமிழ் அகதிகள் ஒன்பது பேர் தாயகம் திரும்பியுள்ளார்கள். இந்தியா திருச்சி மாவட்டம் கோட்டைபட்டு அகதிமுகாம், கிருஷ்ணபுரம் மாவட்டம், பாம்பர்டேம் அகதிமுகாம், மதுரைமாவட்டம், குறிஞ்சிபட்டு அகதிமுகாம் ஆகிய மாவட்டங்களில் வசித்த ஒன்பது தாயக அகதிகளே இவ்வாறு தாயகம் திரும்பியவர்களாவார்கள்.

தனுஷ்கோடியில் இருந்து இந்திய மீன்பிடி படகுமூலம் கடந்த சனிக்கிழமை அன்றுபேசாலை நடுக்குடா கடற்கரையை வந்தடைந்தனர். அவர்களைப் பேசாலை கடற்புலிகள் பொறுப்பெடுத்து உரியஒழுங்குகளைச் செய்து பேசாலை கிராம உத்தியோகத்தர் மூலம் அவர்களின் சொந்த இடமான வவுனியா ஈச்சங்குளம், கணேசபுரம், யாழ்ப்பாணம், ஒட்டமாவடி, திருமலை, அம்பாறை ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைத்தனர். (18)

## நடமாடும் நூலக சேவை

(திருகோணமலை)

திருக்கோணமலை சகவாழ்வு மன்றத்தினால் நடமாடும் நூலக சேவை ஒன்று கடந்த திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப் பட்டது.

பீப்பிள் இன் நீட் நிறுவனத்தின் அனுசரணையுடன் இது ஆரம்பித்து வைக்கப்பட்டது. முதல் கட்டமாக 2000 தமிழ் புத்தகங்கள் இந்த நடமாடும் நூலக சேவையில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. கடல் அனர்த்தம் காரணமாகத் திருகோணமலை பொது நூலகத்தி லுள்ள 3000இற்கும் அதிகமான புத்தகங்கள் பாதிக்கப்பட்டமையை காரணம் காட்டி இந்த நடமாடும் நூலக சேவை ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது. பீப்பிள் இன் நீட் நிறுவனத்தின் நிதி முகாமையாளர் பட்டர் நவரட் இதனை வைபவ ரீதியாக திருகோணமலை நகரசபை முன்றலில் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து சிங்கள மொழி மூலமான நூல்கள் இச்சேவையில் சேர்த்துக் கொள்ளப்படுமென சகவாழ்வு மன்றத்தின் இணைப்பாளர் ஜெயமுருகன் தெரிவித்தார்.

## சத்திரசிகிச்சை நிபுணரின் சேவையைப் பாராட்டி தமிழீழ சின்னம் பொறிக்கப்பட்ட கேடயம்

(அலுவலக செய்தியாளர்)

லண்டனில் இருந்து வருகைதந்து கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை மேற்கொண்ட சத்திரசிகிச்சை நிபுணர் பிலிப் டியூறி அவர்களின் சேவையினைப் பாராட்டி தமிழீழச் சின்னம் பொறிக்கப்பட்ட கேடயம் ஒன்றினை வைத்தியசாலை வைத்தியர்களும், உத்தியோகத்தர்களும் பிலிப்டியூறி அவர்களுக்கு வழங்கியுள்ளனர்.



(படம் : குகன்)

இந்தக் கேடயம் வழங்கும் நிகழ்வும், பிரியாவிடை நிகழ்வும் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் மாவட்ட வைத்தியசாலை பிரிவின் வைத்தியகலாநிதி யூடிறமேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக சத்திரசிகிச்சை நிபுணர் பிலிப் டியூறி அவர்களுக்கு வைத்திய கலாநிதி சிதம்பரநாதன் மலர்மாலை அணிவித்து வரவேற்று அகவணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமானது.

நிகழ்வில் பிலிப் டியூறி அவர்களின சேவையினையும், அவர் இங்கு வந்து நின்ற காலங்களில் அவர் மூலமாக தாங்கள் கற்றுக்கொண்ட விடயங்களையும், அவர் நோயாளர்களுடன் அணுகி சிகிச்சை மேற்கொண்ட முறைகள் பற்றியும், அவரைப் பாராட்டியும் தலைமையுரையில் டாக்டர் யூடிறமேஸ்குமார் உரைநிகழ்த்தினார்.

தொடர்ந்து மாவட்ட வைத்திய அதிகாரி சதானந்தன், பிரதிமாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் சத்தியமூர்த்தி, டாக்டர் பெஞ்சமின், டாக்டர் பிறைற்றன் ஆகியோர் பிலிப்பின் சேவையினைப் பாராட்டி உரையாற்றினார்கள். அடுத்து சத்திரசிகிச்சை நிபுணர் பிலிப் உரையாற்றினார். இந்நிகழ்வின் இறுதியில் பிலிப்பின் சேவையினைப் பாராட்டி தமிழீழச் சின்னம் பொறிக்கப்பட்ட கேடயம் ஒன்றினை வைத்திய கலாநிதி சிவானந்தன் பிலிப்பிடம் கையளித்தார்.

மேற்படி நிகழ்வில் வைத்திய சாலை வைத்தியர்கள், தாதிமார்கள், உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

## கால்நடை வளர்ப்போர் கூ.சங்கங்களை புனரமைக்க தீர்மானம்

(ஒட்டுசுட்டான்)

வன்னிப் பகுதியிலுள்ள கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச்சங்களைப் புனரமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளர் சி.கரிகாலன் தலைமையில் நிறுவன நடுவகப்பணியகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்தில் உள்ள கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கங்களைப் புனரமைத்தல், கால்நடைகளின் புள்ளிவிபரங்களை வரும் யூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் சேகரித்தல், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் நிதி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களுக் கூடாகவழங்கப்பட வேண்டும் என்பன உட்பட பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

மேலும் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர் ஆகியோரின் பூரண ஒத்துழைப்புடன் இவ்வேலைத்திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும் எனவும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதில் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர்கள், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதேச இணைப்பாளர்கள், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப்பொறுப்பாளர் சின்னண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

## பொது நோக்கு மண்டபம் திறப்பு

(வவுனியா)

நியாப் திட்டத்தின் கீழ் அம்மிவைத்தான் கிராமத்தில் அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபத் திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணிக்கு நடைபெற்றது.

அம்மி வைத்தான் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் செ. பாக்கியநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கலவிளக்கினை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான . சிவநாதன் கிஷோர், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் ஏற்றிவைக்க பொது மண்டபத்தினை வவுனியா அரச அதிபர். சி. சண்முகம் நாடாவை வெட்டி திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கல நாதன். வினோநோகராதலிங்கம் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (10)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் இன்று காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக வவுனியா அரச அதிபர் சி.சண்முகம் அறிவித்துள்ளார்.

வவுனியா அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர்களான வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னான்டோ வன்னி மாவட்ட புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சர் றிஷாத் பதியுதீன் ஆகிய இருவரும் தலைமை தாங்க உள்ளனர். இதில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10)

# டெங்கு நோய் ஒழிப்பு வாரம் யாழ்.இல் 16 ஆம் திகதி ஆரம்பம்

**யாழ்.குடாநாட்டில் எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் டெங்கு ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. உலக சுகாதார ஸ்தாபனம், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் பிரதேச சபைகள் ஆகியன இணைந்து இவ் டெங்கு ஒழிப்பு வாரத்தை ஏற்பாடு செய்துள்ளன.**

இந்த டெங்கு ஒழிப்பு வாரத்தில் டெங்கு நுளம்புகளை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளும், டெங்கு நோயை ஒழிப்பதற்கான பிரச்சார நடவடிக்கைகளும், கருத்தரங்குகளும் நடத்தப்படவுள்ளன.

இது குறித்த முக்கிய மாநாடு ஒன்று கடந்த திங்கள் 10.00 மணியளவில் யாழ்.அரச செயலக மண்டபத்தில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் இடம் பெற்றது.

இதில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் வைத்திய கலாநிதி சிவராஜா, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வி.இராசையா, பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (33)

# தென்மராட்சி மீள் குடியேற்றம் தொடர்பா வரும் 24ஆம் திகதி விசேட மாநாடு

உயர் பாதுகாப்பு வலயம் மீள் குடியேற்றம் தொடர்பான விசேட மாநாடு வரும் 24ஆம் திகதி நடைபெறவிருப்பதாக தென்மராட்சி இடம் பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கம் தெரிவித்துள்ளது. தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள எழுதுமட்டுவாள் வடக்கு, கிழக்கு (விழுவளை) ஓட்டுவெளி கரம்பகம், உசன், மருதங்குளம், மிருசுவில் பகுதியில் உயர் பாதுகாப்பு வயலத்தால் இடம் பெயர்ந்து வாழும் மக்களுக்கான மீள் குடியேற்றம் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பான விசேட மாநாடு வரும் 15ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த சூழலில் தவிர்க்க முடியாத காரணத்தினால் வரும் 24ஆம் திகதி காலை10.00 மணிக்கு மிருசுவில் றோமன் கத்தோலிக்கப் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற இருப்பதாக தென்மராட்சி இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கம், பொது அமைப்புக்கள், தென்மராட்சி மாதர் சங்கம், தேசிய எழுச்சிப் பேரவை, பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் ஆகியோர் தெரிவித்துள்ளனர். இம் மாநாட்டில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (28)

# தொற்று நோய்த் தாக்கம் யாழ். குடாநாட்டில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தொற்று நோய்த் தாக்கங்களுக்கு இலக்காவோர் தொகை அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.

அந்த அடிப்படையில் கடந்த மூன்று ஆண்டுகளில் மாத்திரம் 12767 பேர் தொற்று நோய்த் தாக்கங்களுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலைப் புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கிறது.

இதில் 2002ஆம் ஆண்டில் 3909 பேரும், 2003ஆம் ஆண்டில் 4368 பேரும், 2004ஆம் ஆண்டில் 4490 பேரும் தொற்று நோய்த் தாக்கங்களுக்கு இலக்காகியுள்ளமை அப்புள்ளி விபரத்தில் மேலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவர்களில் அதிகளவானோர் வயிற்றோட்டம், டெங்கு, நெருப்புக் காய்ச்சல் காச நோய் போன்றவற்றின் தாக்கங்களுக்கே இலக்காகியிருக்கின்றமையும் அதில் மேலும் சுட்டிக்காட்டப்படுகிறது. (33)

# யாழ். நகர நெருக்கடியைக் குறைக்கும் நீண்ட காலத் திட்டம் ஆரம்பம்

## முதற் கட்ட நடவடிக்கை அடுத்த வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரை நகரில் இருந்து ஒதுக்குப் புறமாகவுள்ள முற்றவெளிப் பகுதியை நோக்கி நகர்த்துவதற்கான நீண்டகாலத் திட்டம் ஒன்று அமுல்செய்யப்படவிருப்பதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா தெரிவித்துள்ளார்.

இதன் முதற் கட்டமாக யாழ். மத்திய சிற்றூர்தித் தரிப்பிடம், வாடகை வாகனத் தரிப்பிடம் சொகுசு வாகனத் தரிப்பிடம் என்பனவற்றையும், 45 கடைத் தொகுதிகளையும் முற்றவெளிப் பகுதியில் நிர்மாணிக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ள மாநகர சபை ஆணையாளர் க.குணராஜா இதற்கான நடவடிக்கைகள் அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாகவும், தெரிவித்தார். (33)

# யாழ்.நகர நடைபாதை வியாபாரத்தில் வெளிநாட்டு வியாபாரிகள்

யாழ்.நகரத்தில் வெளிநாட்டு வியாபாரிகளும் நடைபாதை வியாபாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக சீனா, ஜப்பான், கொரியா, தாய்வான் போன்ற நாடுகளைச் சேர்ந்த வியாரிகளே தங்கள் தங்கள் நாடுகளில் உற்பத்திசெய்யப்படும் இலத்திரனியல் சாதனங்களை இவ்வாறு நடைபாதை வியாபாரம் மூலமாக விற்பனை செய்து வருகின்றனர்.

இவர்களிடமிருந்து கடிகார வகை கள், சிறிய வானொலிப் பெட்டிகள் போன்றவற்றை பெறக் கூடியதாக இருக்கின்றது (33)

## விபத்தில் இளைஞர் காயம்

மீசாலைப் பகுதி பழைய புகையிரத நிலையத்திற்கு அருகில் வேகமாக வந்த கன்டர் ஒன்றுடன் உந்துருளி மோதியதில் உந்துருளியில் வந்தவர் தூக்கி எறியப்பட்டு படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்கா யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மீசாலை மேற்குப் பகுதியைச் சேர்ந்த இராசரத்தினம் என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளதாக தெரிய வருகின்றது 28)

## வருடாந்த உற்சவம்

(நல்லூர்)

வேலணை மேற்கு பெரியபுலம அருள்மிகு ஸ்ரீமகா கணபதிப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை நண்பகல் 12.00மணிக்கு கொடியேற்ற நிகழ்வு டன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பதினொரு நாட்கள் இடம்பெறும் இந் நிகழ்வில் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் தேர்த் திருவிழாவும் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (41)

## கந்தபுராணம் வாசிப்பு

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கையம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் கந்தபுராணப் பாடல் வாசிப்பு உரையுடன் ஆலய மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

ஆலய வருடாந்த உற்சவத்திற்கு மூன்று மாதகாலத்திற்கு முன்னர் ஆரம்பமாகும் இவ் நிகழ்வு ஆலய கொடியேற்றத்துடன் பூர்த்தி அடையும். (41)

# கொடிகாமம் - சுன்னாகம் பேருந்து சேவை சீரில்லை

சுன்னாகத்தில் இருந்து கோப்பாய் ஊடாக கொடிகாமம் வந்து செல்லும் அரச பேருந்து நேரம் தவறி நினைத்தபொழுது வருவதால் பொது மக்கள் மாணவர்கள், விவசாயிகள், அரச உத்தியோகத்தர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளதாக விசனம் தெரிவிக் கப்படுகிறது. இப்பாதையூடாக இரண்டு பேருந்துகளே சென்று வருவதாகவும், அதுவும் குறித்த நேரத்தில் வராமல் நேரம் தவறி வருவதாகவும், சில வேளைகளில் ஒரு பேருந்தும் வராமல் இருந்து விடுவதாகவும், இதனால் இப் பாதையூடாகச் செல்லும் பயணிகள் யாழ்ப்பாணம் சென்று மாறிச் செல்லும் நிலைமை இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து நடவடிக்கை எடுப் பார்களா அதிகாரிகள் எனப் பொது மக்கள் கேட்கின்றனர். (28)

# -யாழ்.மாவட்டத்தில்- யுத்தத்தால் இடம் பெயர்ந்த மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர் 148 வீடுகள் அமைக்கும்

(யாழ்ப்பாணம்)

இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்களுக்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபைத் தூதுவராலயத்தினரால் யாழ். மாவட்டத்தில் 148 வீடுகள் அமைத்துக் கொடுக்கப் படவுள்ளது.

இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின்னரும் கூட தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்காகவே இவ் வீடுகள் அமைக்கப்படவுள்ளதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபைத் தூதுவராலயத்தினர் தெரிவிக்கின்றனர்.

இதில் சங்கானை பாண்டு வெட்டைப் பகுதியில் 60 வீடுகளும், பொன்னாலைப் பகுதியில் 33 வீடுகளும் மண்டை தீவில்55 வீடுகளுமாக மொத்தம் 148 வீடுகள், அமைக்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது (33)

# பாசையூர் மீன் சந்தையை புனரமைக்க வேண்டுகோள்

பாசையூர் மீன் சந்தையை புனரமைத்து வியாபார நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புத் தரும்படி இப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். கடந்தகாலப் போர் நடவடிக்கையினால் படைமுகாமாகவும், இராணுவம் நிகழ்த்திய செல் தாக்குதலினால் பாதிப்படைந்துள்ள இச்சந்தையை மக்கள் பாவனைக்கு ஏற்றவகையிலும் வியாபார நடவடிக்கைகளுக்கு ஏற்ற சூழலிலும் நவீன முறையில் புனர மைத்து தரும்படி வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். (33)

# சுன்னாகம் நவீன சந்தைப் பகுதியில் ஈருருளிகள் திருட்டு அதிகரிப்பு

(சுன்னாகம்)

சுன்னாகம் நவீனசந்தை சுற்றாடல் பகுதியில் விடப்படும் ஈருருளிகள் திருட்டுப் போகும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி வர்த்தகர்களும் பொதுமக்களும் கவலை தெரிவிக்கின்றார்கள்.

ஒரு வாரத்தில் ஆகக்குறைந்ததுஇப் பகுதியில் இரண்டு ஈருருளிகளாவது களவு போகின்றது எனக்குறிப்பிடுகின்றார்கள். இப்பகுதியில் இயங்கும் மக்கள் வங்கிமேல் மாடியில் இயங்குவதினால் வாடிக்கையாளர்கள் தமது ஈருருளிகளை கீழ்ப்பகுதியில் விட்டுப் பூட்டி விட்டு மேலே சென்று திரும்புவதற்கு எடுக்கும் அரை மணித் தியாலயத்தினுள் இக்களவு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தககதாகும்(41)

# அராலி ஊரெத்தி கிராமத்திற்கு அடிப்படை வசதி செய்து தரக்கோரல்

மிகவும் பின்தங்கிய கிராமமான அராலி ஊரெத்தி கிராமத்திற்கு அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டுமென இப்பகுதி மக்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.

ஊரெத்தி வடக்கு, கிழக்கு பகுதியில் நாநூறுக்கும் மேற்பட்டகுடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும் குடிநீர் ,மலசல கூட வசதி களோ, வீட்டுத்திட்டங் களோ, கடந்த பல வருடங்களாக இம் மக்களுக்கு கிட்டவில்லை என்றும் இதனால் இப்பகுதி மக்கள் மிகவும் பின்தங்கிய ஒரு நிலையிலேயே வாழ்க்கை நடத்தி வருவதாகவும் இப்பகுதியில் கூலித்தொழில் செய்யும் மக்களே வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்துள்ள அப்பகுதி மக்கள் பின்தங்கிய நிலையி லுள்ள இப்பகுதியை முன்னேற்ற எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கும் படியும் கோரியுள்ளனர். (28)

# எஸ்.பி.திஸாநாயக்கவின் எதிர்காலமும் சந்திரிகாவின் அரசியலும்

சந்திரிகாவும், அவரது கணவர் விஜயகுமார துங்கவும் தனது பரம எதிரிகளானபடியால் ஜே.ஆர் ஜயவர்த்தனா விஜயகுமாரதுங்கவை வெலிக்கடைச் சிறையில் அடைத்தார். பின்னர் சந்திரிகா தனது கணவராகிய விஜயகுமார துங்கவைச் விடுதலை செய்யக்கோரி அவரிடத் தில் செல்வார் என எவரும் எதிர்பார்க்கவில்லை. அதேபோல் தனது அரசியல் எதிரியான சந்திரிகாவைச் சந்திப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சென்றுள்ளார் என்பதை யாரும் எதிர்பார்க்க வில்லை. சந்திரிகா அவர்கள் குமாரதுங்கவை



விடுதலை செய்வதற்கு ஜே.ஆர். ஜயவர்த்தனா விடம் சென்றார். விஜயகுமாரதுங்கவிற்கு நடந்தது. எஸ்.பி. திஸாநாயக்கவிற்கும் நடக் குமா? இவற்றைக் கூறுவதற்கு முன்னதாக எஸ்.பி.திஸாநாயக்கவைப் பற்றி “குறுதா” என்ற சிங்கள நாளிதழில் எஸ்.பி.திஸாநாயக்க விஜயகுமாரதுங்கவைப் போல் வரப்போகிறார் என ஒரு தலையங்கத்தை வெளியிட்டுள்ளது.

ஜே.ஆர்.ஜயவர்த்தனா 1982 ஆம் ஆண்டு சனாதிபதி தேர்தலுக்குப் பின் மக்கள் கணிப்பீடு ஒன்றை மேற்கொண்டார். அப்பொழுது சிறிலங்கா சுதந்திரக்கட்சி படுதோல்வியுற்று முற்றாக செயலற்றுக் கிடந்தது. இந்தத் தோல்வி விஜயகுமாரதுங்கவைப் பாதிக்க வில்லை. நல்ல அரசியல் செல்வாக்கு அப்பொழுது அவருக்கிருந்தபடியால் சிறிலங்கா, சுதந்திரக்கட்சியை மீண்டும் கட்டியெழுப்பு வதற்கு இலங்கை முழுவதிலும் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டு சிறிலங்கா சுதந்திர கட்சிக்கு மீண்டும் உயிரூட்டினார். ஜே.ஆர். ஜயவர்த்தனாவுக்கு விஜயகுமாரதுங்கவின் அரசியல் வளர்ச்சி பிடிக்கவில்லை. சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவேண்டுமானால் எப்படியாவது விஜயகுமாரதுங்கவைத் தனது பிடிக்குள் சிக்கவைக்க வேண்டுமென ஜே.ஆர் திட்டத்தை வகுத்தார்.

2004 ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பூச்சிய நிலைக்கு இறங்கியது. ஆனாலும் எஸ்.பி.திஸாநாயக்க அரசியலில் சறுக்கி விழவில்லை. விஜயகுமாரதுங்கவைப் போல் எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு அரசியலில் நல்ல செல்வாக்குண்டு தோல்வி அடைந்த ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் கட்டி யெழுப்புவதே அவரின் அரசியல் குறிக்கோளாக இருந்தது. பூச்சிய நிலைக்குத் தள்ளப்பட்ட கட்சியை கட்டியெழுப்புவதற்கு மேடைகளில் சந்திரிகாவை திட்டிக் கொண்டு நாடு முழுவ திலும் பிரச்சார வேலைகளில் ஈடுபட்டிருந்தார்.

சர்வசன வாக்கெடுப்பையும், அரசியல் யாப்பையும் மாற்றுவது எப்படி என சந்திரிகா சிந்தித்துக் கொண்டிருந்தார். அதைச் செய்ய வேண்டுமானால் ஐக்கிய தேசியக் கட்சியினரின் வாய்களுக்குப் பூட்டுப் போடவேண்டும் இவர்களுக்குப் பின்னால் புலனாய்வுத்துறை யினரை அனுப்பினார். அதாவது எஸ்.பி.திஸா நாயக்கவை இலங்கை புலனாய்வுத்துறையினர் பின் தொடர்ந்து சென்று கொண்டிருந்தனர். ஆனால் எஸ்.பி.திஸாநாயக்காவின் வாயை மூடுவதற்கு அரசுக்கு முடியாமல் போயிற்று. இப்படிக் காலம் கடந்து கொண்டிருந்த வேளை யில் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கெதிராக வழக்குகள் மேல் நீதி மன்றத்தில் தொடர்ந்தன. இன்னும் சில வழக்குகள் தொடர்ந்து கொண்டே இருக் கின்றன. இவற்றுக்கிடையில் எஸ்.பி.திஸா நாயக்க நீதிமன்றத்தை அவமதித்தார் என குற்றம் சாட்டப்பட்டு இரண்டு வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் இப்பொழுது சிறைவாசம் அனுபவித்துக் கொண்டு இருக்கின்றார். எஸ்.பி. திஸாநாயக்க சிறைக்குச்சென்ற பின் சர்வ சனவாக்கெடுப்புக்கு திகதியை நிர்ணயித்து சனாதிபதி நத்தார் விடுமுறைக்காக வெளி நாட்டுக்குச் சென்றார். சுனாமிப்பேரலைகளினால் அவரின் திட்டங்கள் யாவும் அடித்துச் செல்லப்பட்டது. எஸ்.பி.திஸாநாயக்க விடு தலை பெறுவார் என நம்புகின்றனர். ஆனால் சந்திரிகா முட்டாள் பெண் அல்ல. விஜய குமாரதுங்கவுக்கு ஜே.ஆர்.ஜயவர்தனா சனாதிபதியாக இருக்கும் காலத்தில் எதைச் செய்தாரோ அதேபோல் எஸ்.பி.திஸாநாயக் கவுக்கும் சந்திரிகா செய்யப்போகிறார். விஜய குமாரதுங்கவை சிறையில் அடைத்து வைத்து அவரைக் கடும் துன்பங்களுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என ஜே.ஆர் எண்ணினார். எனினும் அவர் ஒரு புகழ் பெற்ற சினிமா நட்சத்திரம். அவருக்கு சிறைவாசம் ஒத்துக்கொள்ளாது. மற்றும் அவரின் உடல்நிலை இதனால் பாதிக்கும். அதிக நாட்கள் இவரால் சிறையில் இருக்க முடியாது என்பது ஜே.ஆர்.ஜயவர்த் தனாவுக்கு நன்றாகத் தெரியும். அத்துடன் சிறிமாவோ பண்டாரநாயக்கவோ அல்லது அநுரா பண்டாரநாயக்கவோ, விஜயகுமாரதுங் கவை சிறையில் இருந்து விடுவிப்பதற்கு வரமாட்டார்கள் என்பதை ஜே.ஆர்.ஜயவர்த்தனா நன்கு உணர்ந்தார். விஜயகுமாரதுங்கவை அழிப்பதற்கு இரண்டு மார்க்கங்களை ஜே.ஆர்.ஜயவர்த்தனா கையாண்டார். முதலாவது விஜயகுமாரதுங்கவை சிறையில் வைத்து இல்லாதொழிப்பது, இரண்டாவது விஜய குமாரதுங்கவை விடுதலை செய்து தனது அனுதாபங்களைத் தேடிக்கொண்டு அவரின் மார்க்கமாக சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவிற்கும், அவரது மகன் அநுராவுக்கும், எதிராக விஜயகுமாரதுங்கவை அரசியல் பகடைக்காயாகப் பயன்படுத்தி சிறிலங்கா சுதந்திரக்கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்த வேண்டும் என்பதை வைத்து செயற்படத்தொடங்கினார். இரண்டாவது திட் டத்தை தேர்ந்தெடுத்தார். அதாவது விஜய குமாரதுங்கவினால் நீண்டகால சிறைவாசம் அனுபவிக்க முடியாது. ஆகவே சந்திரிகா நேரடியாக ஜே.ஆர்.ஜயவர்தனாவிடம் சென்று குமாரதுங்கவை விடுதலை செய்தார். ஜே.ஆர். ஜயவர்தனாவை அழிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டு சிறைவாசம் சென்ற விஜயகுமாரதுங்க சிறையில் இருந்து திரும்பி வரும் பொழுது சிறிமாவோ பண்டாரநாயக் கவையும், அநுராபண்டாரநாயக்கவையும் அழிக்கும் திட்டத்துடன் வெளியே வந்தார். விஜயகுமாரதுங்க அதைச் செயற்படுத்திய காரணத்தினால் 1988 ஆம் ஆண்டு நடந்த சனாதிபதித் தேர்தலில் சிறிமா தோற்றுப் போனார். விஜயகுமாரதுங்கவின் மக்கள் கட்சி சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாரின் வாக்குகளைச் சிதறடித்தது. அதற்கு அனுசரணையாக ஓ.சி.அபேகுணசேகராவும் செயற்பட்டு வந்தார்.

இந்த சரித்திரம் சந்திரிகாவுக்கு நன்கு தெரியும். தனது கணவரின் கட்சி என்றபடியால் சந்திரிகா இந்த சரித்திரத்தில் ஒரு பங்காளி யாவர். ஆகவே ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் ஓடி விளையாடு பாப்பா விளையாட்டைப் பற்றி சந்திரிகாவை விடத் தெரிந்தவர் இந்த நாட்டில் கிடையாது. அன்று அந்த விளையாட்டை விஜயகுமாரதுங்கவுக்கு ஜே.ஆர்.ஜயவர்த்தனா விளையாடிக் காட்டினார். இன்று அதே விளையாட்டை சந்திரிகா எஸ்.பி.திஸாநாயக்க வுக்கு விளையாடிக் காட்டிக் கொண்டு இருக் கிறார். ஆனால் எஸ்.பி.திஸாநாயக்க அந்த விளையாட்டுக்கு அகப்படவில்லை. சந்திரி கவை சனாதிபதி பதவியில் இருந்து விரட்டி அடித்து ரணில் விக்கிரமசிங்க சனாதிபதியாகும் வரை தான் சிறைவாசம் அனுபவிப்பேன் என்று கூறியது சந்திரிகாவினால் ஜீரணிக்க முடியா மல் போயிற்று. அவர் எப்படி கூறினாலும் சிறை வாழ்க்கை இப்பொழுது எஸ்.பி.திஸாநாயக் கவுக்கு வெறுத்துப் போய் உள்ளது. சந்திரி கவுக்கு இது நன்கு தெரிந்துள்ளபடியால் சந்திரிகாவின் அமைச்சர்களையும், மற்றும் திஸாநாயக்கவுக்கு மிக நெருங்கியவர் களையும் தூது அனுப்பினார். ஐக்கிய தேசியக் கட்சி மன்னிப்புக் கேட்டால் தான் திஸாநாயக் கவை விடுதலை செய்யத்தயார் என தூதுவர் களிடம் கூறியுள்ளார். அப்படி ஐக்கிய தேசியக் கட்சி திஸாநாயக்க சம்பந்தமாக மன்னிப்புக் கேட்டால் ஐக்கியதேசியக்கட்சி சந்திரிகாவுக்கு முன் மண்டி இட்டதற்கு சமமாகும் திஸாநாயக்கவை விடுதலை செய்யும்படி மாபெரும் ஆர்ப்பாட்டம் கொழும்பில் நடத்தியது சந்திரிகாவிடம் மன்னிப்புக் கேட்பதற்கு அல்ல.

ஐக்கிய தேசியக் கட்சியை ஆரம்பித்த எப்.ஆர்.சேனாநாயக்க டி.எஸ்.சேனாநாயக்கா போன்றவர்களும் சிறைவாசம் அனுபவித்த வர்கள் அவர்கள் வெள்ளையரின் ஆட்சியில் சிறைவாசம் அனுபவித்தவர்கள். சிறிமா ஆட்சியின் பொழுது லலித் அத்துலத்முதலி, காமினி அதுகோரள, கப்டன் சி.பி.ஜி.சென விரத்ன போன்றோர் சிறைவாசம் அனுபவித்த வர்கள் அதேபோல் 2004 ஆம் ஆண்டு சந்திரிகா மீண்டும் ஆட்சிக்கு வந்தபின் காதரைக் கைது செய்து சிறையில் தள்ளினார். ரவிகருணா நாயக்கவையும் கைது செய்வதற்குப் பெரும் முயற்சிகளை சந்திரிகா மேற்கொண்டார். ஆனால் ரவிகருணாநாயக்கவிடம் இந்த விளையாட்டு செல்லுபடியாகவில்லை. எஸ்.பி. திஸாநாயக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியி லிருந்து தனது அரசியல் செல்வாக்கை வளர்த்து பின் ஐக்கிய தேசியக்கட்சிக்கு தாவியவர். ஆகவே அவரிடம் சந்திரிகா விளையாட முடியும் ஆனபடியால் மற்றவர் களிடம் இந்தப் பாப்பா விளையாட்டைக் காட்ட முடியாது. எஸ்.பி.திஸாநாயக்க விசயம் தெரிந்த அரசியல்வாதி, ஆனபடியால் எப்படியாவது சிறையில் இருந்து வெளியே வந்து மீண்டும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதையே தற்பொழுது விரும்புகிறார்கள். நான்கு சுவர்களுக்கிடையில் சிக்கியுள்ள திஸாநாயக்க வெளியே வரவேண்டுமானால் சந்திரிகாவின் சேலையின் தலைப்பைப் பிடிக்க வேண்டும். அப்படி சேலைத்தலைப்பை பிடித்துக்கொண்டு வெளிவந்தாலும் அவருக்கு கட்சியில் இருந்து வேறு இடத்திற்கு தாவிப் பாயமுடியாது. விஜயகுமாரதுங்கவும், ரோகணா விஜயவீராவும் ஜே.ஆர்.ஜயவர்த்தனா வீசிய கயிற்றைப் பிடித்துக்கொண்டு வெளியே வந்தவர்கள் பின் ஜே.ஆர்.ஜயவர்த்தனாவுக் கெதிராக செயற்பட்டார்கள் அதேபோல் எஸ்.பி. திஸாநாயக்க சந்திரிகாவின் சேலைத் தலைப்பை பிடித்துக் கொண்டு வெளியே வந்தாலும் சந்திரிகாவுடன் ஒன்றிணைந்து செயற்படுவார் என உத்தரவாதம் அளிக்க முடியாது. தன்னைச் சிறையிலிருந்து விடுவிப்பதற்கு எவரும் முன்வரவில்லை. கட்சி யின் தலைமைப்பீடம் என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டது. சந்திரிகா உதவியதால் நான் வெளியே வந்துவிட்டேன். அந்த நன்றிக் கடனுக்காக சந்திரிகாவுடன் இணைந்து செயற் படப் போகின்றேன் என்று எஸ்.பி.திஸாநாயக்க கூறுவார் என சந்திரிகா நினைக்கலாம்.

ஆனால் அவர் சிறையில் இருந்து வெளிவந்து சந்திரிகாவும், ரணிலும் எனக்குத் துரோகம் செய்து விட்டபடியால் இவர்களை விரட்டி அடித்துவிட்டு புதிய கட்சியை ஆரம் பிப்போம் என்று கூறினால். சந்திரிகா தப்பித்துக் கொள்வார். எமது நாட்டுக்கு இன்று சமாதானம் தேவை. நாங்கள் பழைய குரோதங்களை மறந்து செயற்படுவோம். இன்று ஜே.வி.பி சனாதிபதிக்கெதிராக செயற்பட்டு வருகின்ற படியால் சனாதிபதியின் கரத்தைப் பலப்படுத்து வோம் என்று எஸ்.பி.திஸாநாயக்க கூறு வாரானால் சந்திரிகாவுக்கு ஒரே கொண் டாட்டமாக இருக்கும். அப்படி எஸ்.பி.திஸா நாயக்க கூறினால் விஜயகுமாரதுங்கவுக்கு நடந்த கதியே அவருக்கும் நடக்கும். சிலவேளைகளில் எஸ்.பி. திஸாநாயக்கவை சந்திரிகா விடுதலை செய்து அவர் வெளிவந்து இரண்டொருமாதங்கள் மௌனமாக இருந்து மீண்டும் சந்திரிகாவை நாட்டை விட்டு விரட்டி அடிப்போம் என்று கூறினாலும் இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் கிடையாது. எது எப்படி இருந்தாலும் எஸ்.பி.திஸா நாயக்காவிற்கு சந்திரிகாவால் அரசியல் பாடம் கற்பிப்பது மிகவும் கடினம். மறு வளமாக 1994 ஆம் ஆண்டு எஸ்.பி.திஸாநாயக்க அரசியலில் சந்திரி காவுடன் இணைந்து



செயற்பட்டபடியால் திஸா நாயக்கவிற்கு நாணயக்கயிற்றைப் போட்டு அவரைத் தனது பிடிக்குள் அடக்கி வைத்திருந்த சந்திரிகாவுடன் விளையாடுவதும் கடினமான காரியமாகும்.

உப்புல் ஜோசப் பர்னாந்து
லங்காதீப
மொழியாக்கம். அ.சக்திவேல்.

ஆனாலும் இப்பொழுது இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்த எஸ்.பி.திஸாநாயக்க சந்திரிகாவின் சேலைத் தலைப்பைப் பிடிப் பதற்கு ஏன் முயற்சி செய்கிறார். என்பது கேள்விக்குறியாக உள்ளது.

※ ※ ※ ※ ※

# புலிகள் பலம் பொருந்தியவர்களாக இருந்ததால் அவர்களுடன் பேச்சுக்கு அரசாங்கம் முன்வந்தது

## ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ



(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் ஆயுதம் தரித்தாலும் அவர்களிடமும் பலம் இருக்கின்றது. இதன் காரணமாகவே பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் முன்வந்தது என வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ கருத்துத் தெரிவித்துள்ளார்.**

மேலும் அவர் அவர்கள் தற்போது அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முன்வந்துள்ள சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இது நாட்டிற்கு நன்மையைத் தரக்கூடியதாக இருக்கும்.

விடுதலைப் புலிகள் உள்நாட்டில் தடை செய்யப்பட்ட அமைப்பு அல்ல. இந் நிலையில் விடுதலைப் புலிகளும், இலங்கை அரசாங்கமும் உள்ளடங்கிய பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பது நியாயமானது அல்ல. ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தவரை முழுமையாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தாலும் அரசாங்க நிவாரணப்பணிகளுக்கு எவ்வகையிலும் அவர்கள் தடையாக இருந்ததில்லை. இந்நிலையில் இந்தப்பணிகளுக்கு அவர்களும் உள்ளடக்கப்பட்டால் அது மிகவும் நல்லதாக இருக்கும் தற்போது சமாதானப் பேச்சுவார்த்தை இடை நிறுத்தப்பட்டிருந்தாலும் அந்தப் பேச்சுவார்த்தையுடன் தொடர்புடைய மறுதரப்பு விடுதலைப்புலிகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஒரு பிரதேசத்தில் ஒரு பிரிவினருக்கு ஏதாவது அதிகாரம் இருக்குமானால் அந்தப்பிரதேசத்தில் எந்தவொரு காரியத்தையும் செய்வது மிகவும் இலகுவானது. மக்களைப் பொறுத்தவரை அரசாங்க அதிகாரத்தை விட அந்த பிரிவினரிடம் அதிகாரம் இருக்க வேண்டும் என ஏதோ ஒரு காரணத்திற்காக எதிர்பார்க்கின்றனர்.

.உத்தேச பொதுக்கட்டமைப்பானது தனி நாட்டுக்குரிய அத்திவாரம் என ஜே.வி.பி. போன்ற கட்சிகள் அச்சம் தெரிவித்துள்ளன.

இப்படியான அச்சம் புதியதொன்றல்ல. ஏற்கனவே போர் நிறுத்த உடன் படிக்கை கைச்சாத்திட்ட போது கூட இப்படியான அச்சம் நிலவியது. இது தேவையற்ற அச்சமாகும். இப்படியான அச்சங்களும் சந்தேகங்களும் நிலவினால் பிரச்சினைக்கு தீர்வென்பது கிடைக்கப்போவதில்லை.

விடுதலைப்புலிகள் தங்களுக்கு தனி நாடு தேவை எனக்கருதினால் போர் நிறுத்த உடன் படிக்கையிலோ அல்லது உத்தேசக் கட்டமைப்பிலோ ஆர்வம் காட்ட வேண்டிய தேவை இல்லை. "எங்கள் வழியை நாங்கள் பார்க்கின்றோம். உங்கள் உதவி எங்களுக்கு தேவை இல்லை" என்றிருப்பார்கள்.

இந் நாடு சிங்கள பௌத்த மக்களுக்கு மாத்திரம் சொந்தமானது என நினைப்பதுதான் பிரச்சினைகளுக்கு மூலகாரணம். இது நாட்டில் வாழும் சகல இனமக்களுக்கும் சொந்தமானது என்பதை உணர்ந்து சகல அதிகாரங்களையும் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# 100 மீ. கடல் வலய சட்டம் அவசியமற்றதென்கிறது உ.வங்கி

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கம் அறிமுகம் செய்துள்ள 100 மீற்றர் கடல் வலய பாதுகாப்புச் சட்டம் அவசியமற்றது என உலக வங்கி அறிவித்துள்ளது.

அண்மையில் உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் சிறிலங்கா அரசாங்கத்தின் இந்தத் திட்டம் எந்தவிதமான விஞ்ஞான பூர்வமான அணுகுமுறைகளையும் கொண்டதல்ல என்று உலக வங்கி விமர்சித்துள்ளது. (32)

# உட்செல்ல முடியாமல் வெளியே நிற்கும் தலதாமாளிகை ஊழியர்கள்!

(கொழும்பு)

தலதா மாளிகையின் நிர்வாகம் பற்றிய பிரச்சினைகள் வலுத்து வருவதனால் அதன் ஊழியர்களுக்கு அலுவலகத்திற்கு வெளியே நிற்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

பதில் தியவதன நிலமேயாக நியமிக்கப்பட்டிருக்கும் ரொஹான் பரணகமவின் நியமனத்தை ஏற்கமறுக்கும் அஸ்கிரிய பீடாதிபதி உடுகம சிறி புத்தரகித்தமகாநாயக்கதேரர் மாளிகையின் திறப்புக்களை அவரிடம் கையளிக்க மறுத்து வருகிறார். மாளிகையின் அலுவலகங்கள் பூட்டப்பட்டுள்ளதனால் ஊழியர்கள் அலுவலகத்தினுள் சென்று தமது பணிகளைச் செய்யமுடியாது வெளியே நிற்கின்றனர். பௌத்தவிவகார ஆணையாளர் நாயகம் எச்.டி.சுனில் மற்றும் பௌத்த விவகார அமைச்சின் செயலாளர் டி.டபிள்யு. அபேவிக்ரம ஆகியோர் அஸ்கிரிய மகாநாயக்கரைச் சந்தித்து மாளிகையின் திறப்புக்களை பதில் தியவதன நிலமேயிடம் கையளிக்குமாறு வேண்டுகோள்விடுத்தபோதிலும் அவர் அந்த வேண்டுகோளை ஏற்கவில்லை. புதிய தியவதன நிலமே ஒருவர் தெரிவுசெய்யப்படும் வரை முன்னர் பதவியிலிருந்த தியவதன நிலமேயை பதில் நிலமேயாக நியமிக்காமல் வெளியார் ஒருவரை பதில் தியவதன நிலமேயாக நியமித்ததன் ஊடாக அரசாங்கம் ஒரு பிழையான செய்கையைச் செய்துள்ளதென அஸ்கிரியபீடாதிபதி தெரிவித்துள்ளார்.இதேவேளை எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அஸ்கிரிய பீடாதிபதியைச் சந்தித்து இந்த விடயம் குறித்து உரையாடியதாக அறிவிக்கப்படுகிறது.

# பாதுக்கையில் கள்ள நோட்டு மூவர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

பாதுக்கையில் 500 ரூபா கள்ள நோட்டு அச்சிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதுக்கை கலகெதர எனும் இடத்திலுள்ள வீடொன்றிலேயே இந்த கள்ள நோட்டு அச்சடிக்கப்பட்டு வந்துள்ளது.நேற்றைய தினம் பாதுக்கையிலுள்ள மின் உபகரண விற்பனை நிலையமொன்றிற்கு வந்த ஒருவர் பொருள் ஒன்றை கொள்வனவு செய்த பின் வழங்கிய 500 ரூபா நோட்டை சந்தேகித்த கடை உரிமையாளர் பொலிஸாருக்குச் செய்த முறைப்பாட்டை அடுத்தே இந்த விடயம் அம்பலத்திற்கு வந்துள்ளது. பொலித்தீன் பைகள் தயாரிக்கும் வீடொன்றிலேயே இந்தக் கள்ள நோட்டுக்கள் அச்சடிக்கப்பட்டு வந்துள்ளன. நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்று மேலும் இருவரைக் கைது செய்துள்ளனர். கள்ள ரூபா நோட்டு அச்சிட்ட மூவரும் 30 வயதிற்குட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.குறிப்பிட்ட வீட்டை சோதனையிட்ட பாதுக்கைப் பொலிஸார் அந்த வீட்டிலிருந்து 951 ஐந்நூறு ரூபா நோட்டுக்கள், கணினி ஒன்று, பிரின்டர் ஒன்று உட்பட மேலும் கள்ள ரூபா நோட்டு அச்சிட பயன்படுத்தப்பட்ட பொருட்களைக் கைப்பற்றியுள்ளனர்.

# கட்சியின் இலாபத்திற்காக எவரும் தேசிய ஆதாயத்தைப் பாழடிக்காதீர்

*–சிறிலங்கா சனாதிபதி வலியுறுத்து*

கட்சி இலாபத்திற்காக தேசிய ஆதாயத்தைப் பாழடிக்க வேண்டாம் என சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

கட்டுகஸ்டிகிலிய லுல்னேவா திட்டத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் வைபவத்தில் கலந்து கொண்ட சனாதிபதி சந்திரிகா கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அரசின் கைகளைப் பலப்படுத்த வேண்டுமேயொழிய, அரசுக்கெதிராகச் செயற்படக் கூடாது என்று அறிவுரை வழங்கியுள்ளார்.

சனாதிபதி அங்கு மேலும் உரையாற்றுகையில்;

ஆளும் கூட்டணி மொத்தம் ஒன்பது கட்சிகளை உள்ளடக்குகின்றது. கூட்டணியை உடைப்பதற்கு தாம் காரணமாக இருக்கமாட்டோம் என ஒன்பது கட்சிகளுமே வாக்குறுதி அளித்துள்ளன. ஆனால் வாக்குறுதியை வார்த்தையில் மட்டுமல்லாது செயற்பாட்டிலும் காட்ட வேண்டும்.

சனநாயகத்தை சரியான முறையில் முன்னெடுப்பதே தற்போதைய அரசின் நோக்கம். இந்த நாட்டை விரைவாகக் கட்டியெழுப்ப தற்போதைய அரசு திட சங்கற்பம் பூண்டுள்ளது. இதற்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும், தங்களது கட்சி சார்ந்த இலாபங்களுக்கு முன்னுரிமை வழங்காது. நாட்டின் தேசிய நன்மைக்காக செயற்பட முன்வர வேண்டும்.

வறுமையில் வாடும் பாதிப்படைந்த அப்பாவி மக்களே போரில் இறந்து போகிறார்கள். அதனால் பேச்சுவார்த்தை மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும்.

அரசைக் கவிழ்ப்பதற்கான நடவடிக்கைகளை கூட்டணியில் உள்ள கட்சியொன்று செய்யுமானால் நாட்டின் வளர்ச்சியே பாதிப்படையும் என்றும் அவர் கூறினார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உரையாற்றுகையில;ஆளும் கூட்டணியின் வேகமான அபிவிருத்திகளையும், நாட்டில் கூட்டணி முன்னெடுத்து வரும் செயற்பாடுகளையும் கண்டு ஐக்கிய தேசியக் கட்சி ஆத்திரமடைந்துள்ளதாகவும், அதன் காரணமாக ஆளும் கூட்டணி மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி மக்களைத் திசை திருப்ப முயல்கிறது என்றார்.

# பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது நாட்டைப் பிரிப்பதற்கு முதற்படி

## தேசிய பிக்குகள் முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை விடுதலைப்புலிகளுடன் இணைந்து உருவாக்குவது, இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அவர்களுக்கு வழங்குவதற்குச் சமமானது இது நாளடைவில் நாட்டைப் பிரிப்பதற்கான முதற்படியாக அமையுமென தேசிய பிக்குகள் முன்னணி, சனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில், தெரிவித்து, தனது எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளது.

அரச நிதியைப் பகிர்வது, செலவு செய்வது அல்லது ஒதுக்குவதற்கு, அரச சரத்து 148ன் படி, சட்டப்படி தெரிவாக அரசாங்கத்திற்கு மட்டுமே உரிமை இருக்கிறது. இந்தச் சட்டத்திற்கு முரணாக, விடுதலைப் புலிகளுடன் நிதிப்பங்கீட்டிற்கான ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்வது ஏற்றுக்கொள்ள முடியாதது.சில வெளிநாட்டுச் சக்திகளும், ரணில் விக்கிரமசிங்கவின் ஐ.தே.கட்சியும் இதுபோன்ற இணக்கப்பாட்டை விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தும்படி அழுத்தம் கொடுத்தும் ஆதரவு கொடுத்தும் வருகின்றன.

ஆனால், இத்தகைய பொதுக்கட்டமைப்பை முற்றாக நிராகரிக்க வேண்டுமென்று சனாதிபதியை இந்த முன்னணி கேட்டுக் கொண்டுள்ளது. சுனாமி நிவாரணத்துக்கான பொதுக்கட்டமைப்பு குறித்து தனக்கு எதுவுமே தெரியாது என்று கூறி பிரதமர் தப்பிக்க முயற்சித்துள்ளதைக் கண்டித்துள்ள இந்த முன்னணி, அதிகாரத்திலுள்ளவர்கள் தங்கள் பொறுப்பை சரியாகச் செய்வது முக்கியமானது என்றும் எச்சரித்துள்ளது. (32)

# மேல்மாகாண முதலமைச்சர் மீதான குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு முன் ஆஜராகமாட்டோம்

## ஐ.தே.கட்சி ஜே.வி.பி. முடிவு

(கொழும்பு)

மேல்மாகாண சபை முதலமைச்சர் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் முன் ஆஜராவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.

மேல் மாகாணசபை முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே மீது பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி ஐக்கிய தேசியக் கட்சி மேல் மாகாண சபையில் அவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரத் தீர்மானித்திருந்தது. நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவரவிருந்த தினத்திற்கு முன்தினம் மேல் மாகாண ஆளுநரால் மாகாணசபை ஒத்திவைக்கப்பட்டு அவர் மீதான குற்றச்சாட்டுக் களை விசாரணை செய்ய ஆணைக்குழுவொன்றும் நியமிக்கப்பட்டது இவ்வாணைக் குழுவானது பிரச்சனைக்கு உரிய தீர்வினைப் பெற்றுத்தராது என நம்புவதால் இந்த ஆணைக் குழு முன் ஆஜராகி ரெஜி னோல்ட்கூரே மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான ஆதாரங்களை சமர்ப்பிக காது விடத் தீர்மானித்துள்ளதாக மேல்மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கித்சிறி காட்டபிட்டிய தெரிவித்தார்.

இம்மாதம் 17ஆம் திகதி மாகாணசபை மீண்டும் கூடும் போது மேல்மாகாணசபை முதலமைச்சருக்கெதிராக புதியதொரு நம்பிக்கையில்லாத தீர்மானத்தைக் கொண்டுவர கட்சி தீர்மானித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை ஒழுங்கு விதிகளுக்கு முரணாக இந்த ஆணைக்குழு கூட்டப்பட்டிருப்பதாகத் தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணியினரும் ஆணைக்குழு முன் ஆஜராகப் போவதில்லை என முடிவு செய்துள்ளனர். ஆணைக்குழு முன் ஆஜராகி சாட்சியளிக்கப் போவதில்லை எனத் தெரிவித்த மக்கள் விடு தலை முன்னணியின் மாகாண சபை உறுப்பினர்களின் குழுத் தலைவர் வருண தீப்தி ராஜபக்ச முதலமைச்சர் மீதான குற்றச் சாட்டுக்களை ஆவணப்படுத்தி அதனை நேற்று முன்தினம் மேல்மாகாண ஆளுநா அலவி மௌலானா விடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## முல்லைத்தீவு - முகமாலை

## 10.05.2005 இல் புதிய நேர விரிப்பு

மேற்படி பேருந்துப்பணி அரச பணியாளர்கள், பொதுமக்களின் வேண்டுகைக்கு அமைவாக 10.05.2005 ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக நடைபெறும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

### முல்லைத்தீவு - முகமாலை

### நேர ஒழுங்கு

| நாயாறு | செம்மலை | குழுமுனை | முல்லைத்தீவு | புதுக்குடியிருப்பு | விசுவமடு | பரந்தன் | இயக்கச்சி | புதுக்காட்டுநகர் | முகமாலை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | காலை 05.30 | 06.15 – 06.30 | 07.15 | 07.55 | 08.20 | 08.25 | 08.40 |
| | | | காலை 06.00 | 06.45 – 07.00 | 07.45 | 08.25 | 08.50 | 08.55 | 09.10 |
| | | | காலை 07.00 | 07.45 – 08.00 | 08.45 | 09.25 | 09.50 | 09.55 | 10.10 |
| காலை 05.45 | 06.05 | 06.25 | காலை 07.30 ✓ (பிழையாக 08.00) | 08.15 – 08.30 | 09.15 | 09.55 | 10.20 | 10.25 | 10.40 |
| | | | காலை 08.00 | 08.45 – 09.00 | 09.45 | 10.25 | 10.50 | 10.55 | 11.10 |
| | | | காலை 08.30 | 09.15 – 09.30 | 10.15 | 10.55 | 11.20 | 11.25 | 11.40 |
| | | | காலை 09.00 | 09.45 – 10.00 | 10.45 | 11.25 | 11.50 | 11.55 | 12.10 |
| | | | காலை 09.30 | 10.15 – 10.30 | 11.15 | 11.55 | 12.20 | 12.25 | 12.40 |
| | | | காலை 10.00 | 10.45 – 11.00 | 11.45 | 12.25 | 12.50 | 12.55 | 01.10 |
| | | | காலை 10.30 | 11.15 – 11.30 | 12.15 | 12.55 | 01.20 | 01.25 | 01.40 |
| | | | காலை 11.00 | 11.45 – 12.00 | 12.45 | 01.25 | 01.50 | 01.55 | 02.10 |
| | | | பகல் 11.30 ✓ | 12.15 – 12.30 | 01.15 | 01.55 | 02.20 | 02.25 | 02.40 |
| | | | பகல் 12.00 ✓ | 12.45 – 01.00 | 01.45 | 02.25 | 02.50 | 02.55 | 03.10 |
| | | | பகல் 12.45 ✓ | 01.30 – 01.45 | 02.30 | 03.10 | 03.35 | 03.40 | 04.00 |

### முகமாலை - முல்லைத்தீவு

### நேர ஒழுங்கு

| முகமாலை | புதுக்காட்டு நகர் | இயக்கச்சி | பரந்தன் | விசுவமடு | புதுக்குடியிருப்பு | முல்லைத்தீவு | குழுமுனை | செம்மலை | நாயாறு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| காலை 08.30 | 08.45 | 08.50 | 09.15 | 09.55 | 10.40 – 11.00 | 11.45 | | | |
| காலை 09.00 | 09.15 | 09.20 | 09.45 | 10.25 | 11.10 – 11.30 | 12.15 | | | |
| காலை 09.30 | 09.45 | 09.50 | 10.15 | 10.55 | 11.40 – 12.00 | 12.45 | | | |
| காலை 10.00 | 10.15 | 10.20 | 10.45 | 11.25 | 12.10 – 12.30 | 01.15–02.20 | 03.20 | 03.40 | |
| காலை 10.30 | 10.45 | 10.50 | 11.15 | 11.55 | 12.40 – 01.00 | 01.45 | | | |
| பகல் 11.00 ✓ | 11.15 | 11.20 | 11.45 | 12.25 | 01.10 – 01.30 | 02.15 | | | |
| பகல் 11.30 ✓ | 11.45 | 11.50 | 12.15 | 12.55 | 01.40 – 02.00 | 02.45 | | | |
| பகல் 12.30 ✓ | 12.45 | 12.50 | 01.15 | 01.55 | 02.40 – 03.00 | 03.45–04.00 | 05.00 | 05.20 | 05.40 |
| பகல் 01.00 ✓ | 01.15 | 01.20 | 01.45 | 02.25 | 03.10 – 03.30 | 04.15 | | | |
| பகல் 01.30 ✓ | 01.45 | 01.50 | 02.15 | 02.55 | 03.40 – 04.00 | 04.45 | | | |
| பகல் 02.15 ✓ | 02.30 | 02.35 | 03.00 | 03.40 | 04.25 – 04.45 | 05.30 | | | |
| மாலை 03.00 ✓ | 03.15 | 03.20 | 03.45 | 04.25 | 05.10 – 05.30 | 06.15 | | | |
| மாலை 04.15 ✓ | 04.30 | 04.35 | 05.00 | 05.40 | 06.25 – 06.45 | 07.30 | | | |
| மாலை 05.30 ✓ | 05.45 | 05.50 | 06.15 | 06.55 | 07.40 – 08.00 | 08.45 | | | |

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி
முல்லைத்தீவு.

(சி-11848)

திருத்த நேரவிரிப்பு 09-.05.-2005ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டது. இதுவே சரியானதாகும். ஆகவே 08.05.2005 இல் பிழையாக பிரசுரமானதின் திருத்தம் இன்றைய விளம்பரத்தில் சரி அடையாளம் இட்டு காட்டப்பட்டுள்ளது என்பதனை பயணிகளுக்கு அறியத் தருகின்றோம்.

நலமே

CENTENARY 2004

චාවකච්චේරි හින්දු මහ විදුහල
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
CHAVAKACHCHERI HINDU COLLEGE

# நூற்றாண்டு நிறைவு 1904

## யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

# நூற்றாண்டு நிறைவைக் குறிக்கும் மாபெரும் கல்விக்கண்காட்சி

பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களுடன் இக்கண்காட்சியை அணிசெய் நிறுவனங்களாக

*.யாழ்ப்பாண மின்னகத்தின் (LG-அபான்ஸ் காட்சிக் கூடம்.

*.அன்னை நாகாபூட் சிற்றியின் நீல்கமால்-பிளாஸ்ரிக் தளபாடக் காட்சிக் கூடம்.

*. குறிஞ்சி ஸ்தாபனத்தின் பஜாஜ் மோட்டார் சைக்கிள் காட்சிக்கூடம்.

*. IIS-கணனி நிறுவனத்தின் காட்சிக்கூடம் *யாழ்.CD-City-இன் காட்சிக் கூடம்

இன்னும் பல காட்சிக் கூடங்கள் இங்கு-சிறப்புத்தள்ளுபடி விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்யலாம். சிறுவர் களுக்குப் பெருவிருந்தாக *மெரிக்கோரவுண்ட் *பாதாள கிணற்றில் மோட்டார் சைக்கிள் சவாரி

காலம்: 2005 - மே 12 ஆம், 13 ஆம் 14 ஆம் நாள்
இடம்:- பாடசாலை வளாகம்

பாடசாலை அதிபர்,
ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலைச் சமூகம்.

(சி.11874)

*இக்கண்காட்சி சிறப்புற மாணவர்களின் கல்வி சிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.*
*என்றும் நாம் உங்களுடன்*

விளம்பர அனுசரணை:-

மாணவர்களின் வளர்ச்சியே எம்மண்ணின் உயர்ச்சி!

## விக்னேஸ்வரா களஞ்சியம்

கண்டி வீதி, சாவகச்சேரி.

## மணிஜூவெல்லர் (இணை) ஈசன் ஜூவெல்லறி

கச்சாய் றோட், சாவகச்சேரி.

பிரதான வீதி, சங்கானை.

## பைந்தமிழ் வெதுப்பகம்

கண்டி வீதி, சாவகச்சேரி.

## லோட்டஸ் கொம்பியூட்டர் மனேஜ் மன்ற் பிஸ்டம்ஸ்

கணனி கல்வி நிலையம், இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி.

## அம்பிகாமருந்துச்சாலை

கண்டி வீதி, சாவகச்சேரி.

## சுமங்கலிமருந்துச்சாலை

இல:16 கண்டி வீதி, சாவகச்சேரி.

# மூன்றுநாள் போட்டி ஓமர், அஷ்ரபுல் சதம் பங்களாதேஷ் அணி 381 ஓட்டம் குவிப்பு



இங்கிலாந்து சுற்றுலாவை மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி இங்கி லாந்து அணியுடனான டெஸ்ட் போட்டியில் பங்கேற்கும் முன்பு அந்நாட்டு பல்கலைக்கழக அணியுடனான மூன்று நாள் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்கிறது.இதில் பங்களாதேஷ் துடுப்பாட்ட வீரர் ஜாவிட் ஓமர் மொகமட் அஷ்ரபுல் ஆகியோர் பெற்ற சதம் பங்களாதேஷ் அணிக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. பங்களாதேஷ் அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 381 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியை வென்ற இங்கிலாந்து பல்கலைக்கழக அணி பங்களாதேஷை துடுப்பாடப் பணித்தது. அதன்படி ஓமரும்,நபிஸ்இக்பாலும், ஆரம்ப இணையாக களமிறங்கினர். அணி 74 ஓட்டங்களைப் பெற்ற போது இக்பால் 24 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதனைத் தொடர்ந்து சகாரியார் நபீஸ் களமிறங்கி ஐந்து பந்துகளைச் சந்தித்து ஓட்டம் பெறாமல் ஆட்டமிழந்தார். பின்னர் இக்பாலுடன் இணைந்த ஹபிபுல் பசார் எட்டு ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் அணியின் எண்ணிக்கை 99 ஆக இருக்கும் போது இக்பாலுடன் இணைந்த மொகமட் அஷ்ரபுல் நிதானமாக ஆடி 87 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காது.

நேற்று மூன்று விக்கெட் இழப்பிற்கு 238 ஓட்டத்துடன் தொடர்ந்த பங்களாதேஷ் 109.1 ஓவர் நிறைவில் 381ஓட்டங்களைப்பெற்று அனைத்து விக்கெட்டையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் ஜாவிட்ஓமர் 161 ஓட்டங்களையும், அஷ்ரபுல் 102 ஓட்டங்களையும் பெற்றனர்.

# இங்கிலாந்தின் அன்ரூஸ்ரோசை வம்புக்கு இழுக்கிறார் வோர்ன்



இங்கிலாந்து அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான அஷஸ் கிரிகெட் தொடர் வரும் ஜுலை 21இல் தொடங்குகிறது. இத்தொடரில் அவுஸ்திரேலிய சுழல் மன்னன் வோர்ன் அதிக விக்கெட் வீழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.தற்போது இங்கிலாந்தின் கவுண்டி போட்டிகளில் விளையாடி வருகிறார். ஹாம்ப்ஷையர் தலைவரான வோர்ன் நான்கு விக்கெட் வீழ்த்த மிடில் தோல்வி அடைந்தது.

இப்போட்டியில் மிடில் அணிக்காக விளையாடி இங்கிலாந்தின் ஸ்ரோஸ் 19 ஓட்டங்களில் வோர்ன் பந்தில் போல்டானார். இதைத் தான் மிகப் பெருமையாகக் கூறுகிறார் வோர்ன் "முதல் முறையாக ஸ்ரோசுக்கு பந்துவீசினேன். எனக்கு எதிராக எப்படி விளையாடுகிறார் என்று பார்த்தேன் ரிவர்ஸ்-ஸ்வீப் செய்தபோதே சரியாகக் கணித்து ஆடத் தெரியவில்லை என்பதை புரிந்து கொண்டேன். இது மனதளவில் தென்பைத் தந்துள்ளது. இவரது விக்கெட்டை எளிதில் வீழ்த்தி விடலாம் என்று நம்பிக்கை பிறந்துள்ளது" என்றார் வோர்ன்.

# மேற்கிந்தியத்தீவு மண்ணில் முதல் டெஸ்ட் தொடர் வெற்றி

- இன்சமாம் நம்பிக்கை



மேற்கிந்தியத்தீவு மண்ணில் முதல் டெஸ்ட். தொடர் வெற்றி கிடைக்குமென பாகிஸ் தான் அணித்தலைவர் இன்சமாம் உறுதியளித்துள்ளார்.


இரண்டு டெஸ்ட் மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்பதற்காக பாகிஸ்தான் அணி மே.தீவு பயணம் மேற்கொள்கிறது. ஒருநாள் தொடர் வரும் 18இல் தொடங்குகிறது. இதற்காக புறப்படும் பாகிஸ்தான் அணியின் ஆறாவது மே.தீவு பயணமாகும். டெஸ்ட் தொடரைப் பொறுத்த வரையில் பாகிஸ்தான் இங்கு ஒருமுறை கூட வெற்றி பெற்றதில்லை.

கடந்த ஐந்து தொடரில் அதிகபட்சமாக ஒரே ஒரு சமன் (1998) மட்டுமே செய்துள்ளது. மற்ற நான்கு தொடர்களிலும் மே. தீவு வென்றுள்ளது. ஆனாலும் இன்சமாமுக்கு இது ராசியான இடம். 1993 இல் மோசமான நிலையில் இருந்த இவர் அன்டிகுவா டெஸ்டில் சதம் அடித்து இழந்த பெருமையை மீட்டார். பின்னர் ஏழு ஆண்டுகள் கழித்து 2000ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக மே.தீவு சென்ற இன்சமாம் ஜார்ஜ்டவுன் டெஸ்டில் 135 ஓட்டம் குவித்தார். தற்போது தலைவராக இருக்கும் இவர் இம்முறை சாதனை படைக்கப் போவதாக கூறியுள்ளார்.

இவர் அளித்த பேட்டியில் " இது எனது மூன்றாவது மேற்கிந்திய தீவுப் பயணம். முதல் பயணத்தில் சிறந்த துடுப்பாட்டவீரர் என்ற பெயரெடுத்தேன். இம்முறை டெஸ்ட் தொடரை கைப்பற்றும் முதல் பாகிஸ்தான் தலைவர் என்ற பெருமையும் பெறுவேன்" என்றார்.

சமீபத்தில் நடந்த இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி குறிப்பிட்ட நேரத்தில் பந்துவீசி முடிக்காததால் இன்சமாமுக்கு ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் பார்படோஸ் நகரில் நடக்கும் முதல் டெஸ்டில் இவர் பங்கேற்க மாட்டார். இப்போட்டியில் யூனிஸ்கான் தலைவராகச் செயற்படுவார்.

# பூட்டியாவுக்கு கல்லீரல் பிரச்சினை ஒரு மாதம் ஓய்வெடுக்க வலியுறுத்து



பூட்டியாவுக்கு கல்லீரல், தைரொய்ட் பிரச்சினை இருப்பதாக சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு மாதம் முழு ஓய்வில் இருக்க வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்திய அணியின் நட்சத்திர கால்பந்து வீரரான பூட்டியா, ஈஸ்ட் பெங்கால் கிளப் அணிக்காக விளையாடி வருகிறார். சமீபத்தில் தூர்க்மெனிஸ்தான் சென்ற ஈஸ்ட் பெங்கால் அணி ஏ.எப்.சி. கோப்பைக்கான தொடரில் பங்கேற்றது. இத்தொடரின்போது பூட்டியாவுக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டது. பின்னர் வயிற்று வலி தொடர உடல் எடை ஒரு மாதத்தில் 7.5 கிலோ குறைந்துபோனது. இதையடுத்து கொல்கொத்தாவில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இவருக்கு மருத்துவர் மகேஷ் கோயங்கா தலைமையில் மூன்று பேர் கொண்ட சிறப்புக் குழு தீவிர சிகிச்சை அளித்து வருகிறது. கல்லீரல், தைரொய்ட் பிரச்சினை இருப்பதாக மருத்துவர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இது குறித்து மகேஷ் கோயங்கா கூறுகையில்; பூட்டியாவுக்கு சி.டி.ஸ்கேன் தைரொய்ட்ஸ்கேன் என்டோஸ்கோபி உட்பட பல பரிசோதனைகள் செய்யப்படவுள்ளன. இதன் முடிவை அறிந்த பின்னர் உரிய சிகிச்சை அளிக்கப்படும். மீண்டும் கால்பந்து விளையாட ஒரு மாதம் ஆகலாம். அதுவரை முழு ஓய்வில் இருப்பதே சிறந்தது என்றார்.




# உலக செஸ் போட்டி ஆனந்த் பங்கேற்பு



உலக செஸ் 'சம்பியன்' போட்டி ஆர்ஜென்டினாவில் செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி முதல் ஒக்டோபர் 16ஆம் திகதி வரை நடக்கிறது. இதில் இந்திய வீரர் ஆனந்த் பங்கேற்கிறார். மற்றும் ருஸ்டம் காசிமிட்சோனோவ் (உஸ்பெகிஸ்தான்), மைக்கேல் ஆடம்ஸ் (இங்கிலாந்து), விளாடிமிர் கிராம்னிக் (ரஷ்யா), பீட்டர் லெகோ (ஹெங்கேரி) காஸ்பரோவ் (ரஷ்யா), வெசெலில் தபலோவ் (பல்கேரியா), அலெக்சாண்டர் லெமோரோவிச் (ரஷ்யா) ஆகியோரும் இந்தப் போட்டியில் கலந்து கொள்கிறார்கள்.

இந்தப் போட்டியின் மூலம் உலக சம்பியனைத் தேர்ந்தெடுப்பது பல்வேறு சந்தேகங்களுக்கு முற்றுப் புள்ளி கொடுக்கும் என்று ஆனந்த் தெரிவித்துள்ளார்.

# டொன் பிரட்மன் ஈடு இணையற்றவர்

ஷேவாக்

டொன் பிராட்மேனுடன் என்னை ஒப்பிட்டது கௌரவம் அளிக்கிறது. ஆனால் அவரது சாதனையை யாரும் நெருங்க முடியாது. அவர் ஈடு இணையற்றவர் என்கிறார் இந்தியாவின் ஷேவாக். வெற்றிக்கு எல்லா வீரர்களும் பொறுப்பேற்க வேண்டும். அப்போது தான் அணிக்கு எல்லா ஆட்டத்திலும் வெற்றி கிடைக்கும்.

திருமணமான பிறகு நான் மாறவில்லை முன்புபோல் தான் இருக்கிறேன்1999ஆம் ஆண்டில் மொகாலியில் பாகிஸ்தானுக்கு எதிராக அடித்த சதம் மறக்க முடியாததாகும். இவ்வாறு ஷேவாக் கூறினார்.

# பிரான்ஸ் டென்னிஸ் தொடர் சானியா மிர்சா ஆடுகிறார்

ஸ்டாரஸ் பார்க் ஓபன் டென்னிஸ் போட்டி பிரான்ஸில் வரும் 16ஆம் திகதி தொடங்குகின்றது. காயம் காரணமாக கடந்த ஒரு மாதங்களாக விளையாடாமல் இருந்த இந்திய இளம் வீராங்கனை சானியா மிர்சா இந்தப் போட்டியில் ஆடுகிறார்.பிரான்ஸ் ஓபன் டென்னிஸ் போட்டிக்குத் தயாராகும் விதத்தில் சானியா இதில் பங்கேற்கிறார். தற்போது அவர் இத்தாலியில் பிரபல பயிற்சியாளர் பொப் [illegible]ரெட்டிடம் பயிற்சி பெற்று வருகிறார்.



ரியோடி ஜெனிரோவில் நடந்த "பீச் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியில் அமெரிக்காவின் பென்யம் அஸ்டோர்கை (இடது) ஜப்பான் வீரர் குனிஹிரோவிடம் இருந்து பந்தைத் தட்டிச் செல்கிறார். இந்தப் போட்டியில் ஜப்பான் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# கரைதுறைப் பற்றுசெயலக மெய்வன்மைப் போட்டி

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான தடகளப் போட்டிகள் எதிர்வரும் 12ஆம், 13 ஆம் திகதிகளில் வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதென விளையாட்டுத்துறை அதிகாரி ச.குமார் தெரிவித்தார். இதில் பதிவு செய்யப்பட்ட அனைத்துக் கழகங்களையும் போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றார். (20)

## பிற்போடப்பட்டது

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட இருந்த மரதன் ஓட்டம்,சைக்கிள் ஓட்டப்போட்டிகள் பாடசாலைகளுக்கு இடையே நடைபெறுகின்ற பெருவிளையாட்டுக் காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருவதுடன் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

## உடற்பயிற்சிபோட்டி

யாழ்.கல்வி வலயங்களுக்கிடையிலான உடற்பயிற்சிப்போட்டி எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.கோண்டாவில் இராமகிஸ்ணா மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.


இதேவேளை சதுரங்கப்போட்டி எதிர்வரும் சனிக்கிழமை பத்தொன்பது வயது ஆண்,பெண் இருபாலாருக்குமான போட்டிகள் நடைபெறும். எதிர்வரும் 16ஆம் திகதி ஆண்,பெண் இருபாலாருக்குமான போட்டிகள் நடைபெறும். (சு)

# மாவீரர் கிண்ணகால்பந்துபோட்டி அரையிறுதி ஆட்டங்கள் 20ஆம் திகதி

தமிழீழ விளையாட்டுத்துறை யாழ். உதைபந்தாட்டலீக்கின் ஆதரவுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடாத்தும் மாவீரர் ஞாபகார்த்த உதைபந்தாட்டப்போட்டியின் அரை இறுதி ஆட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மாலை 4மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஆட்டத்தில் இளவாலை ஜங்கொன்றிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. இவ்வாட்டங்கள் யாவும் எவரெட்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

இதேவேளை தமிழீழ விளையாட்டுத்துறை யாழ் உதைபந்தாட்ட லீக் ஆதரவுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடாத்தும் கடந்த ஆண்டுப் போட்டி இறுதி ஆட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி மாலை நான்கு மணிக்கு எவரெஸ்ட் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இவ்வாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மைலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம்மோதவுள்ளது. (சு)



**சிந்தனைக்கு**

எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்கும் மனோதிடமும், நம்பிக்கையும், உறுதிப்பாடும் எங்களிடம் உண்டு.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 12-05-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com


## அயலவர் மீதான அக்கறை!

இந்தியாவின் பாதுகாப்புக் குறித்து சிங்களத் தலைவர்கள் பலர் இன்று பெரும் கவலை கொண்டுள்ளனர். விடுதலைப்புலிகளினால் சிறிலங்கா அரசிற்கு பாதிப்புக்கள் உண்டோ இல்லையோ இந்தியாவிற்கு விடுதலைப்புலிகளால் பெரும் ஆபத்துள்ளது என்பதே அவர்களின் இன்றைய கவலையாகும்.

இவ்வாறு இந்தியாவின் பாதுகாப்பில் அக்கறை கொண்டுள்ள சிங்களத் தலைவர்கள் பலர் விடுதலைப்புலிகளின் தற்போதைய நடவடிக்கைகளால் இந்தியாவிற்கு இராணுவ அரசியல் ரீதியில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் குறித்து கூக்குரல் இடுகின்றனர். விடுதலைப்புலிகளின் கடற்படையினால் ஆபத்து என அண்மைக் காலம் வரையில் கூக்குரல் இட்டவர்கள் இன்று விடுதலைப்புலிகளின் வான்படையில் ஆபத்து எனக் கூக்குரல் இடத் தொடங்கியுள்ளனர்.

இதேசமயம், அரசியல் ரீதியாக விடுதலைப்புலிகளின் இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை, இந்தியாவின் இறைமைக்கும், பாதுகாப்பிற்கும் ஆபத்து எனக் கூக்குரல் இட்டுவந்த சிங்களத் தலைவர்கள் தற்பொழுது ஆழிப்பேரலை அனர்த்த உதவி நிதி முகாமைத்துவம் தொடர்பான பொதுக்கட்டமைப்பும் இந்தியாவிற்கு ஆபத்து எனஎச்சரிக்கத் தொடங்கியுள்ளனர்.

இந்த வகையில், ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இந்தியா மீது தற்பொழுது காட்டும் அக்கறை ஒரு இந்தியருக்கே இல்லாத அளவிற்கு தீவிரமிக்கதாகவுள்ளது. விடுதலைப்புலிகளுடன் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படுமானால், அது இலங்கைக்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கும் ஆபத்து எனக் குறிப்பிட்டுள்ள அவர் ஆபத்தில் இருந்து இந்தியாவைப் பாதுகாக்கும் பொறுப்பும் இலங்கைக்குண்டெனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இந்திய இராணுவம் (1987) வருவதற்கு முன்பாக – குறிப்பாக இந்தியா–சிறிலங்கா சமாதான உடன்பாட்டிற்கு முன்பாக சிங்கள அரசியல் கட்சிகள், ஆட்சியாளர்களின் எவர் இந்தியாவின் ஆதரவாளர்கள், இந்தியாவின் பாதுகாவலர்களாக இருந்தார்கள்? நெருக்கடி ஒன்றின்போது இந்தியாவிற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் யார்?

எந்தவொரு சிங்கள ஆட்சியாளர்களும் சரி, அரசியல் வாதிகளும் சரி இந்தியாவின் ஆதரவாளர்களாக, இந்தியாவின் பாதுகாப்பில் அக்கறை கொண்டவர்களாக எப்பொழுதுமே இருந்ததில்லை. இந்தியா மீதான அச்சம் காரணமாக இந்திய எதிர்ப்பினை அடக்கி வாசித்தார்களே ஒழிய இந்தியாவை அவர்கள் ஆதரிக்க முன்வரவில்லை. சில ஆட்சியாளர்கள் மேற்குலக ஆதரவாளர்களாகவும், சில ஆட்சியாளர்கள் கிழக்காசிய ஆதரவாளர்களாகவுமே இருந்தனர்.

அதிலும் குறிப்பாக, தற்பொழுது இந்தியாவின் பாதுகாப்பிற்காகக் கண்ணீர் விடும் ஜே.வி.பி யினர் ஆரம்பத்தில் இந்திய எதிர்ப்பு வாதத்தை முன்வைத்தே அரசியல் நடத்த விளைந்தவர்கள். ஜே.வி.பி யின் ஸ்தாபகர் ரோகண விஜிய வீராவில் இருந்து தற்போதைய தலைவர் வரையில் இந்திய எதிர்ப்புவாதிகளே ஆகும்.

இந்தியா – சிறிலங்கா சமாதான உடன்பாட்டை அடுத்து பெரும் வன்முறையில் இறங்கிய ஜே.வி.பியினர் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்த பருப்பை (மைசூர் பருப்பு) விற்பனை செய்த வியாபாரிகளையே படுகொலை செய்தவர்கள். அவர்கள் முழுமைப் படுத்தப்பட்ட அரசியல் செயற்பாடாக இந்திய எதிர்ப்பே இருந்தது.

ஆனால், அவர்கள் இன்று இந்தியாவின் பாதுகாவலர்கள், இலங்கையில் அமைதிக்கும் மேலாக இந்தியாவின் பாதுகாப்பைப் பற்றிச் சிந்திப்பவர்கள் ஆகியுள்ளார்கள். தமிழீழக் கடற்படையில், வான் படையில் இந்தியாவிற்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் பற்றி இவர்கள் அடையும் கவலை மிகப்பெரிது. இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை, பொதுக்கட்டமைப்பு என்பனவற்றால் இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலைப் பற்றிபெரும் அக்கறை கொண்டுள்ளனர்.

அரசியல்வாதிகள் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விதத்தில் பேசுவதில் வல்லவர்கள் என்பது தெரிந்தவொன்றுதான். ஆனால், அரசியல் வாதிகளின் கடந்தகால அரசியல் வரலாற்றை வைத்துத்தான் அவர்கள் எதற்காக இவ்வாறு பேசுகின்றார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இந்த வகையில் ஜே.வி.பி. மட்டுமல்ல, சிறிலங்கா அரசியல் கட்சிகள் சிங்கள அரசியல் வாதிகள் யாவருமே இந்தியாவிற்கு என்றுமே விசுவாசமாக இருந்ததில்லை; இருக்கப் போவதுமில்லை.

ஆனால், அரசியல் சித்தாந்த விளக்கங்கள், இராஜதந்திரம் என்ற ரீதியில் சிறிலங்கா அரசியல்வாதிகள் மேற்கொள்ளும் முயற்சிகள் நீண்ட கால நோக்கில் தோல்வியைச் சந்திப்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும். ஏனெனில், அரசியல், சித்தாந்தம் ஆயினும் இராஜதந்திரமாகினும் உளப்பூர்வமான பற்றுதலின்றி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் நம்பகத்தனத்தை நீண்ட காலம் தக்கவைத்துக் கொள்வது கடினமாகும்.

# மூன்றாண்டு சமாதான உருவாக்கல் காலத்தில் தமிழ் பேசும் மக்கள் பெற்ற உரிமைகள் என்ன?

### –நோர்வே பிரதமரிடம் கிளி.வெ.அ.ஒன்றியம் கேள்வி

(அலுவலகசெய்தியாளர்)

கடந்த மூன்று ஆண்டு கால சமாதான உருவாக்கல் செயன் முனைப்புக் காலத்தில் தமிழ் பேசும் மக்கள் பெற்றுக்கொண்ட உரிமைகள் என்ன என்று கிளிநொச்சி வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் நோர்வே பிரதமரிடம் கேள்வியெழுப்பியுள்ளது.

மட்டக்களப்பில் பொதுமக்கள் மீதான சிறிலங்கா இராணுவ வன்முறைக்கு எதிராக இடம்பெற்ற நேற்றைய கண்டனப் பேரணியில் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கைத்தீவில் கடந்த அரை நூற்றாண்டு காலமாகத் தொடர்ந்து வரும் தமிழ்பேசும் மக்களுக்கான அரசியல் சமத்துவம் கோரிய போராட்டமும், அதன் விளைவுகளையும் தாங்கள் நன்கு அறிவீர்கள். எந்தவொரு நாகரிகம் மிகுந்த சமூகமும் ஏற்றுக்கொள்ளாத வன்போருக்கும் அப்போரின் கொடும் விளைவுகளையும் நாம் எதிர்கொள்ள நேர்ந்தது. இத்தகைய நெருக்கீடுமிகுந்த தருணத்தில் சிறிலங்காவில் இனங்களுக்கிடையே அமைதியையும், சமாதான சகவாழ்வையும் ஏற்படுத்தி, அரசியல் சமத்துவத்தின் உறுதிப்பாட்டைப் பேணி, உலக சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்கு மதிப்பளித்து தங்கள் நாட்டு அனுசரணையுடன் உருவாக்கப்பட்டதே புரிந்துணர்வு சாசனம் என்பது வரலாறாகி விட்டது. கடந்த மூன்று ஆண்டு கால சமாதான உருவாக்கற் செயன் முனைப்புக் காலத்தில் தமிழ் பேசும் மக்கள் பெற்றுக்கொண்ட உரிமைகள் எவை? என்பதை தாங்கள் நினைவிருத்தவும் பொருத்தமான ஏற்பாடு ஒன்றை சர்வதேச சமூகம் முன் தாங்கள் வெளிக்கொணரவும் தங்களுக்குள்ள கடமைப்பாட்டை தமிழ்பேசும் சமூகத்தின் சார்பில் நாம் நினைவூட்ட விரும்புகின்றோம். தமிழ் பேசும் மக்களின் அரசியல் தீர்வை உறுதிப்படுத்தும் சமாதான நகர்வுப் பாதையில் இறுதித் தீர்வு பற்றிய பேச்சுவார்த்தைகள், இடைக்கால நிர்வாக ஆலோசனைகள், மனிதநேய பொதுக்கட்டமைப்பு என்பன சிறிலங்கா ஆட்சியாளர்களினாலும், குறிப்பாக நிறைவேற்று அதிகாரமுடைய எமது சனாதிபதி அவர்களினாலும் எவ்வாறு தோற்கடிக்கச் செய்யப்பட்டுள்ளது என்பதை அனுசரணையாளர் என்ற வகையில் தாங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள் என நம்புகின்றோம்.

மேற்சொன்ன தீர்வுக்கான வரைவுகளின் தோற்கடிப்பு மாத்திரமன்றி யுத்த நிறுத்தத்தை மரணிக்கச் செய்யும் வகையில் சிறிலங்காவின் அரசும், அரச படைகளும் அவர்களின் ஆதரவு பெற்ற பயங்கரவாதிகளும் தொடர்ச்சியாக தமிழ்மக்கள் மீது வன்முறைகளைப் பிரயோகித்து வருகின்றனர். அரசியல் போராளிகள், மக்கள் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள், மக்கள், மாணவர்கள் எனத் தரப்படுத்தலற்ற கொலை முனைப்புச் சம்பவங்கள் இங்கு மலினத்துவம் அடைந்து விட்டன. இத்தகைய சம்பவங்கள் எமை மிகுந்த வேதனை அடையச் செய்துள்ளதுடன், சமாதான வாய்ப்புக்கள் குறித்த எமது பேரவாவைத் தகர்த்தெறியச் செய்துள்ளது. உலகில் சகல இனங்களும் அனுபவித்து வரும், அனுபவிக்கத் துடிக்கும் அரசியல் மானுட தர்மத்தில் சமவாய்ப்புப் பெற்றுக்கொள்ள நாம் கொண்ட எதிர்பார்ப்புத் தவறானதா? இன்னும் எத்தனை காலங்களுக்கு வரட்டுத்தனம் மிகுந்த ஆட்சியாளர்களிடம் அரசியல் உரிமைக்காக இறைஞ்ச முடியும்? இதற்காக மிலேச்சத்தனமான படுகொலைகளையும், அரசியல் ஏமாற்றங்களையும், நேர்மையீனங்களையும் சர்வதேசத்தின் பார்வையுடன் சகித்துக் கொள்ள முடியுமா? எனவே கனம் பிரதமர் அவர்களே!

தாங்கள் மேற்கொண்டு வரும் நடுநிலைமை தவறாத அனுசரணைப்பணி எம்மை மகிழ்ச்சியடையச் செய்கிறது. ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்களின் தொடர் வன்முனைப்புச் செயலாக்கம் எம்மை ஆத்திரமடையச் செய்துள்ளது. இது சமாதான முயற்சிகளுக்குப் பெரும் ஆபத்தை உருவாக்குவதாகும் எனும் வருத்தமிகு செய்தியைத் தாங்கள் புரிந்துகொண்டு செயற்படுவீர்கள் என நம்புகின்றோம்.

ஏற்பட்டுள்ள இறுக்கமான அரசியல் சூழ்நிலைகளில் தளர்ச்சியை உண்டு பண்ண தாங்கள் சர்வதேச அரசியல் தலைவர்கள், இராஜதந்திரிகள், புத்திஜீவிகள், நிதி வழங்குநர்கள் ஊடாக சிறிலங்கா அரசிற்கு இராஜதந்திர, தார்மீக அழுத்தங்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். அரசின் வன்முனைப்புச் செயலூக்கத்தை நிறுத்தி சமாதான முயற்சிகளை விரைவுபடுத்த தாங்களும், தங்கள் அரசும் சகல வளத்தையும், பலத்தையும் பிரயோகிக்க வேண்டுமென்று விநயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

மேற்குறித்த பணிகளை நிறைவேற்ற சர்வதேச சமூகம் முனையாது விடில் சமாதான சூழ்நிலை சாகடிக்கப்பட்டுவிடும் என்பது யதார்த்தமானதாகும். இந்நிலையில் தமிழ்பேசும் மக்களாகிய நாம் எமது விடுதலைக்காகச் செய்த தியாகங்களை வீணடிக்காத வகையிலும், உலக அரசியல் மானுட தர்மத்தைப் பேணுகின்ற வகையிலும், புதிய தீர்க்கமான சர்வதேச அரசியல் நியதிகளுக்கு ஒத்திசைவான தீர்மானத்தை எடுக்கமாறு எமது பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளைக் கேட்டுக்கொள்வதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்? இது தங்களின் உயர்வான கரிசனைக்கு உரியதாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிறிலங்கா இராணுவ தாக்குதல்களைக் கண்டித்து மன்னார், மல்லாவியில் கண்டனப் பேரணிகள்

(மன்னார்)

மட்டக்களப்பு-சந்திவெளியில் பொதுமக்கள் மீதும், மாணவர்கள் மீதும் இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து நேற்று முன்தினம் மன்னார் மாவட்டத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்திலும் கண்டனப் பேரணியும், பூரண ஹர்த்தாலும் கடைப்பிடிக்கப்பட்டது.

இதுபோன்ற கண்டனப் பேரணிகளும், ஹர்த்தாலும் தமிழ் பிரதேசங்கள் எங்கும் நடத்தப்பட்டமை தெரிந்ததே.

மன்னார் மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம், மன்னார் மாவட்ட தொழிற்சங்கங்களின் இணையம், மன்னார் மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை, மன்னார் மாவட்ட மீனவ சங்கங்களின் சமாசம், மன்னார் மாவட்ட விவசாய அமைப்புக்களின் ஒன்றியம், மன்னார் மாவட்ட தமிழ் மாணவர்களின் ஒன்றியம் மன்னார் மாவட்ட மகளிர் அமைப்புக்களின் ஒன்றியம், ஆகிய அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஹர்த்தால் அனுஷ்டித்துள்ளது. இதன்போது வங்காலையிலும், பேசாலையிலும் மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறி வீதியெங்கும் ரயர்களைக் கொழுத்தி தமது கண்டனத்தைத் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு சந்திவெளியில் பொதுமக்கள் மீதும், மாணவர்கள் மீதும் இரா்ணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து நேற்று முன்தினம் மல்லாவிப் பிரதேசத்திலும், மன்னாரிலும் கண்டனப்பேரணியும், கதவடைப்பும் இடம்பெற்றுள்ளன.

மல்லாவிப்பிரதேசத்தில் துணுக்காய்ப் பிரதேச பொது அமைப்புக்கள், பாடசாலை சமூகம் ஆகியன இணைந்து நடாத்திய இப்பேரணி மல்லாவி கொக்காவில் சந்தியிலிருந்து ஆரம்பமாகி துணுக்காய் பிரதானசாலையூடாகச் சென்றது.

இதன் போது மாணவர்கள் பலத்த கோஷங்களை எழுப்பியவாறு சென்றனர். அரசே அப்பாவி மக்களை ஆயுதத்தால் கொல்லாதே, பேரினவாதமே மாணவர்களைக் கொல்லாதே, மக்களைத் தீண்டாதே, என்ற கோரிக்கைகளை எழுப்பியவாறு உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சென்றடைந்தது. அதனைத்தொடர்ந்து கண்டனக்கருத்துரைகளை வெகுசன ஒன்றியத்தலைவர் அ.தனிநாயகம் நிகழ்த்தினார் தொடர்ந்து ஐக்கியநாட்டு செயலாளர் கொபி அனானுக்கு மகஜர்களை துணுக்காய் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பரந்தாமன் அவர்களால் துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் நா.நந்தகுமாரிடம் கையளித்தார்.

# நாட்டில் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடைசெய்ய நடவடிக்கை

### –அமைச்சர் பௌசி அறிவிப்பு

பொலித்தீன் உறைப் பாவனையை முற்றாகத் தடைசெய்யப் போவதாக சிறிலங்காவின் சுற்றாடல் துறை அமைச்சர் எ.எச்.எம் பௌசி தெரிவித்துள்ளார்.

பெலிகுல் ஓயா, கிரிகட்டு ஓயா, சுற்றாடல் விடுமுறை விடுதியினைத் திறந்து வைத்து உரையாற்றிய அவர் பொலித்தீன் பாவனையைக் குறைத்து சுற்றாடல் மாசடைவதைத் தடுப்பதே தனது குறிக்கோள் எனத் தெரிவித்துள்ளார். அடிக்கடி அமைச்சுப் பொறுப்புக்கள் மாற்றப்படுகின்றன. இரண்டு வருடத்தின் பின் சுகாதார சமூக சேவைகள் நீக்கப்பட்டு பெருந்தெருக்களோடு போக்குவரத்து இலாகாவும் சேர்க்கப்பட்டது. அடுத்த இரண்டு வருடங்களுக்கு பின் பெருந்தெருக்கள் மட்டுமே மிஞ்சியது. இப்போது இவ்வமைச்சு என்னிடம் இருக்கிறது இதுவும் ஒருவருடத்திற்குப் பின் மாறுமோ தெரியவில்லை. இது தான் பெரிய பிரச்சினை. எதிர்காலத்தில் அரச நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் அலங்கார வேலைகளுக்கும் பொலித்தீனைத் தடை செய்யவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.


கிளிநொச்சியில்....



ஒட்டுசுட்டானில்....

# யாழ்.இல் இன்று கண்டனப்பேரணி

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு சந்திவெளிப்பகுதியில் சிறிலங்கா படையினர் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து யாழ். மாவட்டத்தில் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இப்பேரணியானது இன்று காலை பத்து மணிக்கு நல்லூர் முருகன் ஆலய முன்றலில் ஆரம்பமாகும் பேரணி கோயில் வீதியூடாக நகர்ந்து இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். மாவட்டப் பணிமனையைச் சென்றடையும். இறுதியில் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளால் மனுக்கையளிப்பு இடம்பெறும். இந்தப் பேரணியில் மாணவர்கள், கல்வியாளர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# நித்திரையிலிருந்த நபர் கழுத்துவெட்டிக்கொலை!

**-காத்தான்குடியில் சம்பவம்**

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பகுதியில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த ஒருவர் கழுத்து வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை நடந்த இச்சம்பவத்தின்போது கொலைசெய்யப் பட்டவர் சின்னத்தம்பி மகேஸ்வரலிங்கம் (வயது-40) என அடையாளம் காணப்பட்டுள்ளதாக காத்தன்குடிப்பொலிசார் கூறியுள்ளனர்.

இக் கொலைதொடர்பான விசாரணைகள் நடைபெற்றுவருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

# அரச நிறுவன ஊழல் மோசடிகளை கண்டறிய சனாதிபதி ஆணைக்குழு!

**-விசாரணைகள் விரைவில் ஆரம்பம்**

(கொழும்பு)

அரச நிறுவனங்கள் சிலவற்றின் ஊழல் மோசடிகள் குறித்து சிறிலங்கா சனாதிபதி விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளது.

பிரபல பாடசாலைகளில் முதலாம் ஆண்டிற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து விசாரணைகளை நடத்தி வரும் சனாதிபதி விசாரணை ஆணைக்குழு சில அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல் மோசடிகள் குறித்து விசாரணைகளை மேற் கொள்ளவுள்ளது. எதிர்வரும் இரண்டு வாரங்களிற்குள் அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்படுமென சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் டபிள்யு. எம்.எம். விக் கிரமசிங்க தெரிவித்தார். அரச நிறுவனங்களில் இடம்பெறும் ஊழல்கள் குறித்து விசாரணை செய்யுமாறு இதுவரை சுமார் 400 கடிதங்கள் அளவில் கிடைத்துள்ளதாகவும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார். சனாதிபதியின் பணிப்பிற்கமைய முதலில் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதில் இடம்பெற்ற முறை கேடுகள் பற்றி விசாரிக்கப்பட்டு வருவதாகவும் அது முடிவடைந்த பின்னர் அரச நிறுவனங்கள் பற்றிய விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் விக் கிரமசிங்க தெரிவித்தார்.

# கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவையின் இரண்டாம் நாளில் பெருமளவானோர் பயனடைவு

(அலுவலகசெய்தியாளர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப்பிரிவினரின் ஒழுங்குபடுத்தலில் லெப்.கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவையின் இரண்டாம் நாளில் பெருமளவா னோர் பயன்பெற்றனர்.



இதன்போது அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

நேற்றைய இரண்டாம் நாள் மருத்துவ சேவைக்கு கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி தலைமை தாங்கினார்.

பொதுச்சுடரினை வைத்திய கலாநிதி விஜயன் ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை வைத்தியர் ராஜா ஏற்றிவைத்தார். கௌசல்யனின் திருவுருவப் படத்திற்கான சுடரினை வைத்தியர் கலை ஏற்றிவைக்க, மலர் மாலையினை மருத்துவப்போராளி இரும்பொறை, மருத்துவப் போராளி பூரணி ஆகியோர் அணிவித்தனர்.

தொடர்ந்து மருத்துவ சேவை ஆரம்பமானது. இரண்டாம் நாள் சேவையில் வேரவில், கிராஞ்சி, பாலாவி, வலைப்பாடு, பொன்னாவெளி, இலவங்குடா, பிருந்தாவனம், மொட்டையன் குளம் உள்ளடக்கிய கிராமமக்களில் 3000 இற்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளதுடன், மேலும் வீடு வீடாகச் சென்று 400 வரை யான வீடுகளுக்கு வீட்டுத்தரிசிப்பு மருத்துவப் பணியும், சுகாதார விழிப்பூட்டலும் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக இந்த இரண்டு நாள் மருத்துவசேவை மூலம் மேற்படி கிராமங்களில் முழுமையான மருத்துவ சேவையும், சுகாதார விழிப்புணர்வு கருத்தூட்டலும், பாடசாலை மாணவர்களுக்கான பலவகையான சிகிச் சைகளும், அவர்களுக்கான சுகாதாரக் கருத்துக்களும் வழங்கப்பட்டுள்ளன.

நேற்றைய இச்சேவையை சிறப்பிக்கும் முகமாக அரசியல்துறைப்பொறுப்பாளர் அவர்களுடன், அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கனும் கலந்து கொண்டார்.

இந்த மருத்துவசேவையில் 15 இற்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகளின் மருத்துவர்களும், 100 இற்கும் மேற்பட்ட மருத்துவப் போராளிகளும் பங்குகொண்டு சிகிச்சை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (கு)

## சிறிலங்காவிற்கு...

மைப்பு அமைக்கப்படவேண்டும். அதன் மூலம் மக்கள் தமிழ் பிரதேசங் களில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் இயல்பை ஏற்படுத்தலாம் என்ற கருத்தைதமிழ்த்தேசிய கூட்டமைப்பு வெளியிட்டுள்ளது.

கண்டியில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் மாநாட்டின்போது அங்கு வருகைதரும் பிரதிநிதிகளுக்கென பொதுக்கட்டமைப்பை வலி யுறுத்திய அறிக்கை ஒன்றையும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு விநியோகிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (32)

## இராணுவத்....

இதில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பொரு ளாதாரத் தடையை முற்றாக நீக்குமாறு கோரும் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு இவர்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் சென்றனர்.

ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் சனாதிபதியிடம் கையளிக்குமாறு பிரதேசசெயலக அதிகாரியிடம் மனு ஒன்றையும் கையளித்துள்ளனர்.

இதன் பிரதிகள் மாவட்ட போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினரிடமும், இராணுவ அதிகாரிகளிடமும் கையளிக்கப்பட்டன.

## கொள்கைத்....

வும், கொள்கைத்திட்ட அறிக்கை நேற்றையதினம் அச்சிடுவதற்கு அனுப்பிவைத்திருப்பதாகவும் இராஜ தந்திர வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

கொள்கைத் திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருப்பதாகத் தெரி வித்துள்ள சிறிலங்கா நிதியமைச்சர் சரத் அமுனுகம, அவற்றை அச்சிடு வதற்கு நேற்றையதினம் அனுப்பியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின்போது சிறிலங்கா அரசாங்கம் வெறுமனனே கடல்கோள் அனர்த்தம் தொடர்பான பாதிப்புக்கள் மற்றும் மீள்கட்டுமானம் தொடர்பாக மாத்திரம் பேசாமல், முன்னெடுக்கத் தீர்மானித்துள்ள தெளிவான திட்டத் தை வெளியிட வேண்டுமென, இலங் கைக்கு உதவி வழங்கும் நாடுகள் எதிர்பார்த்துள்ளன.

இலங்கையில் அடையப்பட வேண்டிய இலக்குகள், பின்பற்றப்பட வேண்டியபொருளாதாரக் கொள் கைகள் தொடர்பாக சிறிலங்கா அரசாங்கம் தெளிவான கொள்கை யொன்றை பின்பற்ற வேண்டு மென்பதே உதவி வழங்கும் நாடுகளின் விருப்பமெனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் 16ஆம் திகதி நடை பெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டை முன்னிட்டு, உதவி வழங்கும் நாடுகளின் பிரதி நிதிகள் கடந்த ஒருவார காலமாகச் சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறானதொரு சந்திப் பொன்று நேற்று முன்தினம் கொழும் பிலுள்ள உலக வங்கிக் கட்டடத்தில் நடைபெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பில் சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் அதிகாரிகளும், இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளான ஜப்பான், சுவீடன், சுவிஸ் லாந்து, பிரான்ஸ் மற்றும் அவுஸ்தி ரேலியா ஆகியவற்றின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

## அமைச்சரவை....

கத்தினால் விலக்கிக் கொள்ளப் பட்டதாக உத்தியோக பூர்வமாக, பகிரங்கமாக அறிவிக்கப்படும்வரை அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்துகொள்ளப் போவதில்லை யென ஜே.வி.பியினர் அறிவித்து ள்ளனர்.

கடந்தவாரம் முன்வைக் கப்பட்ட இலங்கை மின்சாரசபை மறு சீரமைப்புப் பத்திரம் தெளிவற்ற வியாக்கியானங்களைக் கொண்டிருப் பதாகவும்,

இதில் தாம் முன்வைக்கும் மாற்றங்களை ஏற்றுக்கொண்டால் மாத்திரமே ஜே.வி.பி அமைச்சர்கள், அமைச்சரவை கூட்டங்களில் பங்கேற் பார்களெனவும் ஜே.வி.பி கட்சி வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

## நவம்....

பொறுப்பாளர் கலைக்கோன் தமிழீழத் தேசியத்தலைவர் அவர் களிடம் வழங்கினார்.தொடர்ந்து நவம் அறிவுக்கூட போராளிகளால் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

## தமிழர்....

சென்று அரச அதிபரிடமும் மகஜர் கையளிக்கப்பட்டது. இப்பேரணியில் அரச அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோர், பொதுமக்கள், வர்த்தகர்கள் எனப் பெருமள வானோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை மன்னாரில் இரண்டாவது நாளாக நேற்றுப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதுடன் சாலை மறியல் போராட்டத்திலும் மக்களும், மாணவர்களும் ஈடுபட்டனர். இதனையடுத்து குழப்ப முயன்ற பொலிசார் அது முடியாது போகவே அங்குள்ள தமிழ் மாணவர் ஒன்றிய அலுவலகத்தினுள் நுழைந்து அதனை தாக்கிச் சேதப்படுத்தியதுடன், போராளி ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட போராளியை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்ட மக்கள் போராளியை விடுவிக்காவிட்டால் ஹர்த்தால் தொடர்ந்து நடைபெறுமென அறிவித்தனர்.

போராளி கைது தொடர்பாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டது.இதனை அடுத்து நேற்று மாலை அந்தப் போராளி விடுதலை செய்யப்பட்டார்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு கண்டனப்பேரணி ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பணிமனையைச் சென்ற டைந்தது. கண்டனக் கூட்டம் ஒட்டுசுட்டான் பாடசாலைஅதிபர் பங்கயற் செல்வன் தலைமையில் நடைபெற்றது.

அதேசமயம் நேற்று முத்துஐயன் கட்டு இடது கரை யிலும் கண்டனப் பேரணி நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு சந்திவெளியில் இராணுவத்திற்கு எதிராக எதிர்ப்பு நடவடிக் கைகளில் ஈடுபட்ட மக்கள் மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இன வெறியாட்டத்தைக் கண்டித்து நேற்றுக் கிழக்கு பல்கலைக் கழக சமூகத்தின் ஏற்பாட்டில் ஆர்ப் பாட்டமொன்று நடைபெற்றது.

முற்பகல் 9.00 மணி முதல் 11.00 மணி வரை பல் கலைக்கழகத்திற்கு முன்பாகக் கூடிய மாணவர்கள், விரி வுரையாளர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் உட்படப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

"எங்கள் தாகம் தமிழீழ தாயகம் எங்கள் தலைவர் பிராபகரன்" இராணுவ அடக்குமுறை தொடருமானால் நாங்கள் தொடர்ந்தும் பொறுக்க மாட்டோம். என்பவை உட்பட மேலும் சிலவாசகங்களும் ,சுலோகஅட்டைகளில் காணப்பட்டன. மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் பொதுப் போக்குவரத்து சேவைகள் அனைத்தும் சுமார் மூன்று மணித்தியாலங்கள் செயலிழந்திருந்தன.

(ச,தீ,05)

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி.இராயேஸ்வரி சந்திரபாலன்

முல்லைத்தீவு கல்விவலயத்தில் தமிழ்த்துறை உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெற்ற திருமதி. இராயேஸ்வரி சந்திரபாலன் அவர்கள் இறைபதம்அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளோம். தமிழுக்காகவும், வலயத்தில் தமிழை வளர்ப்பதற்காகவும் அயராது உழைத்த அமரரின் சேவைகள் மறக்க முடியாதவை. விடாமுயற்சி, தூரசிந்தனை, பணிவு என்பன கொண்ட அவர் சேவைகள் வலயத்தில் என்றும் வாழும். அன்னாரின் துன்பத்தில் துயருறும்அவர் பிள்ளை களுக்கும், உறவினர்களுக்கும் ஆறுதல் கிடைக்க இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

ஓம் சாந்தி

அதிபர்கள்,ஆசிரியர்கள்,
கோட்டக்கல்விஅதிகாரி,
புதுக்குடியிருப்பு.

(சி.11878)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.